பக்கங்கள்: 13

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை 01.11.2020 கதிர் 357

### இனி இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக மருத்துவர் ப.சத்தியலிங்கத்தைத் தன்பாட்டில் நியமித்து அதனால் ஏற்பட்ட சட்டச் சிக்கல்கள், நெருக்கடிகளை எதிர்கொண்ட கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அந்த நெருக்கடி பக்கம் 02

## நேற்றும் 239 பேருக்கு கொரோனாத் தொற்று

நாட்டில் நேற்றும் 239 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமூகத்தில் இருந்தவர்களுக்கும், தனிமைப்படுத்தல் நிலை யங்களில் இருந்தவர்களுக்குமே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை பக்கம் 02

## மற்றுமோர் ஊடகவியலாளருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி

### அச்சத்தில் நாடாளுமன்றச் செய்தியாளர்கள்

சிங்களப் பத்திரிகை ஒன்றின் நாடாளுமன்ற செய்தியாளராகக் கடமையாற்றி வந்த பெண் ஊடகவியலாளர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்புத் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக நாடாளுமன்றம் சென்ற இரண்டாவது ஊடகவியலாளருக்கும்தற்போதுகொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பக்கம் 02

### கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள

# உள்ளூராட்சிச் சபைகளில் குழப்ப முயற்சி வேண்டாம்!

### 'பட்ஜெட்'டுக்கு சகல உறுப்பினர்களும் ஆதரவு தர வேண்டும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடிப் பணிப்பு

(ந.லோகதயாளன், ஏ.கலையமுதன்)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் கட்டாயம் ஆதரிக்க வேண்டும் எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூடித் தீர்மானித்துள்ளன.** பக்கம் 02





## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளராக மாவை நியமனம்!

### தேர்தல் ஆணையகத்துக்கு அறிவிக்க முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளராக மாவை. சேனாதிராசா செயல்படுவார் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அறிவிப்பதற்கு கூட்டமைப்பின் பக்கம் 02



## யாழில் 11 பேருக்கு நேற்றைய சோதனையில் தொற்றில்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகரில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட 11 பேருக்கும் கொரோனாத் தொற்று இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவ்வாறு உறுதி செய்யப்பட்டவர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து வந்தவர்களாகவும், பக்கம் 02

## வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உள்ளிட்ட 15 நபர்கள் கைது

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் பழைய வாடி கிராமத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உட்பட 15 நபர்களை நேற்று மதியம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புளியங்குளம். பழைய வாடி கிராமத்திலுள்ள சிவ நாகதம்பிரான் ஆலயத்தில் பௌர்ணமி தின விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறுவதற்குரிய விசேட ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த பக்கம் 02

## ஐ.நா. நிகழ்வுக்கு மஹிந்த அழைக்கப்பட்டமை பாதிக்கப்பட்டோரின் முகத்திலறையும் செயல்

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் சாடல்

ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுக்குப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டமையானது, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் முகத்திலறையும் செயலாகும்.

– இவ்வாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடுமையாகச் சாடியுள்ளது.

போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டிருக்கிறார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களின் பொதுவான பக்கம் 02

## வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருவோருக்கு கட்டாய சுய தனிமைப்படுத்தல்

### மாநகர மேயர் அதிரடி அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகரத்துக்கு வெளிமாவட்டத்தில் இருந்து வரும் அனைவரும் நேற்றிலிருந்து 14 நாள்கள் கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று யாழ். மாநகர மேயர் இ.ஆனோல்ட் அறிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் மாநகரப் பக்கம் 02



## கொழும்பு – யாழ்.பஸ் பயணிகள் அறுவரைத் தேடும் பொலிஸார்!

### தொற்றாளர்களுடன் பயணித்தவர்களாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.01

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா உறுதி செய்யப்பட்ட கொழும்பு உணவக உரிமையாளர் பயணித்த பஸ்ஸில் கூடப் பயணித்த 37 பேர் அடையாளம் காணப்பட்டபோதும், எஞ்சிய 6 பேர் அலைபேசியை நிறுத்தி வைத்துள்ளமையால் அவர்கள் 6 பேரையும் கண்டறியப் பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பக்கம் 02

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு ஒருவாறு தீர்வு கண்டு விட்டார் என அறியவருகின்றது.

சிலதினங்களுக்கு முன்னர் கொழும்புக்குச் சென்ற அவர் அங்கு தான் தனியனாகத் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சென்று ஆணையாளர் நாயகத்தைச் சந்தித்திருக்கின்றார்.

*"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பை 2010 இல் நடைபெற்ற தேசிய மாநாட்டில் திருத்தியிருக்கின்றோம். யாப்பின் 13ஆம் விதியின் பிரகாரம் பொதுச் செயலாளர் செயற்பட முடியாதவிடத்து துணைப் பொதுச் செயலாளர் அந்த இடத்துக்குப் பணியாற்ற முடியும் என்ற ஏற்பாட்டின் பிரகாரமே துணைப் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் பதில் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்."* – என்று மாவை சேனாதிராசா தெரிவித்த விளக்கங்களை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஏற்றுக் கொண்டிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

இந்த விதியின் பிரகாரம்தான் அந்த நியமனம் நடந்தது என்பதை எழுத்தில் தருமாறு ஆணையாளர் நாயகம் கோரியமையை அடுத்து, அதனையும் மாவை சேனாதிராசா செய்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்தப் பிரச்சினை இந்த மட்டில் தீர்ந்தது. என்றாலும் அதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – கட்சியின் யாப்பின்படி கட்சிக்கு ஒரு துணைப் பொதுச் செயலாளர்தான் இருக்க முடியும். ஆனால் தலைவர் மாவை சேனாதிராசா இரண்டு பேரை அதற்கு நியமித்திருக்கின்றார். முதலாவது எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. அவர்தான் இப்பதவியில் சிரேஷ்ட நிலையில் இருப்பவர். அடுத்தவர்தான் மருத்துவர் சத்தியலிங்கம். மேலதிகமாக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டவர்.

அவரைப் பதில் பொதுச் செயலாளராக நியமித்தமையை சுமந்திரனோ அல்லது கட்சிக்குள் பிற யாரேனும் பிரமுகர்களோ தேர்தல் ஆணையத்தின் முன்னால் சவாலுக்கு உட்படுத்தாத வரை இந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டதாகவே கொள்ளலாம். இந்த விடயத்தில் சுமந்திரன் பிரச்சினை ஏதும் கிளப்பமாட்டார் என்று மாவை நம்புகின்றார். அது சரியானதுதான். சுமந்திரன் தரப்பிலிருந்து பிரச்சினை எழுப்படாத வரை பதில் பொதுச் செயலாளர் பதவியில் மருத்துவர் சத்தியலிங்கம் தொடர்வதில் சிக்கல் ஏதும் இருக்காது என்றே தெரிகின்றது.

அடுத்தது – இத்தகைய விடயங்களை – தேர்தல் ஆணையத்துடன் ஊடாட்டம் செய்வது, சட்ட விவகாரங்களைக் கையாள்வது போன்ற விடயங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் – அதன் தலைவர் மாவை சேனாதிராசாவின் சார்பில் – நேரடியாகக் கையாள்பவர், இதுவரைக் கையாண்டவர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்தான். இப்போது சுமந்திரனை வெட்டி ஓடத் தயாராகி விட்டார் போலும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா. தேர்தல் ஆணையக விவகாரங்களை சுமந்திரனுக்குத் தெரியாமல் இம்முறை தம்பாட்டில் தனித்து அவர் கையாண்டமையின் பின்னால் புதைந்து கிடக்கும் சூத்திரம் இதுதான். நல்லது. தலைவராகத் தனித்து இயங்கும் அவரது துணிச்சல் பாராட்டுக்குரியது.

அதன் ஓர் அங்கம்தான் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிக் கூட்டம் பற்றிய விவகாரத்திலும் சுமந்திரன் ஓரங்கட்டப்பட்டமையாகும்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் தமிழ்க் கூட்டமைப்புப் பங்காளி கட்சிகளின் கூட்டம் நடைபெற்ற சமயம் சுமார் அரை கிலோ மீற்றர் தொலைவில் தனது வீட்டில் சுமந்திரன் தனது ஆதரவாளர்கள் சகிதம் உரையாடிக் கொண்டிருந்தார். பங்காளிக் கட்சிகளின் கூட்டம் முடிவுற்ற பின்னர்தான் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஓரிரு தீர்மானங்களை சுமந்திரனுக்கு மாவை சொன்னார் என சுமந்திரனுக்கு நெருக்கமான ஒருவர் குறிப்பிட்டார்.

இப்போதும் – இதுவரையும் – கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்தான். அதனால்தான் என்னவோ பங்காளிக் கட்சிகளின் கூட்டம் நடக்கும் தகவல் சுமந்திரனுக்குத் தெரியப்படுத்தப்படாமல் – அவருக்குத் தெரியாமல் – முன்னெடுக்கப்பட்டதோ என்னவோ...!

கூட்டங்களுக்கு சுமந்திரன் – ஸ்ரீதரனை அழைக்காமல் வெட்டி ஓடிக்கொண்டு, தனிப்பட்ட சந்திப்புக்களை அவர்களுடன் நடத்திச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற மாவையின் தந்திரோபாயம் எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும் – சாத்தியப்படும்?

நீண்ட காலத்துக்குச் செல்லாது என்று நான் நினைக்கிறேன். பார்ப்போம்.

★ ★ ★

நிறுவனம் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இருபது லட்சம் ரூபா நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இப்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வழக்கு மறு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டு வாரங்களாகி விட்டன.

யாருக்குச் சாதகமாக இப்போது தீர்ப்பு வந்ததோ அந்தத் தரப்பு அந்தத் தகவலை வெளியிடாமல் பம்மிக் கொண்டிருக்கின்றது. ஏன்? ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு நல்ல பெயர் வந்து விடும் என்றோ...? தெரியவில்லை. முதலில் சம்பந்தப்பட்டோரே செய்தியை வெளியிடுவர் என எதிர்பார்த்தேன். நடக்கவில்லை. இன்னும் காலம் பிந்தவில்லை. விவரம் தொடர்ந்தும் வெளியேவராவிட்டால் அப்போது வாசகர்களுக்குப் பகிரலாம். அதுவரைப் பொறுத்திருப்போம்...!

– மின்னல் –

## மற்றுமோர் ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவதாகக் கொரோனா தொற்றுக்குள்ளானவர், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஊடகவியலாளராவார்.

நாடாளுமன்றச் செய்தியாளர்கள் இருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமையடுத்து அவர்களுடன் நாடாளுமன்றத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஏனைய ஊடகவியலாளர்கள் அச்சத்தில் உள்ளனர்.

## கொழும்பு - யாழ்.பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 29ஆம் திகதி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என அறியப்பட்ட வெள்ளவத்தை உணவக உரிமையாளர் மற்றும் அவருடன் பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இருவர், வேலணையைச் சேர்ந்த ஒருவரும் என நால்வர் NCG என்ற பெயர்கொண்ட WP NC 8760 என்ற இலக்கமுடைய பஸ்ஸில் கொழும்பிலிருந்து கடந்த 25ஆம் திகதி இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டுள்ளனர்.

அவர்கள் மறுநாள் 26ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்த பஸ்ஸில் பயணித்தவர்களை சமூக அக்கறையுடன் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டது.

அத்துடன் பஸ் சேவை நிறுவனத்திடமிருந்து பயணித்தவர்களின் அலைபேசி இலக்கங்கள் பெறப்பட்டு அவர்களை சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரத் துறையினர் நேற்று ஈடுபட்டனர். அவ்வாறு 37 பயணிகள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

அத்துடன், சாரதியும் நடத்துனரும் கொழும்பில் தங்கியுள்ள நிலையில் அங்கு சுயதனிமைப்படுத்தப்பட்டனர். எனினும் அந்த பஸ்ஸில் பயணித்த மேலும் 6 பேர் தமது அலைபேசியை நிறுத்தி வைத் துத் தலைமறைவாகியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. அதனால் அந்த 6 பேரையும் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. –என்றார்.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

## வெளி மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நான்கு கடைகள் சீல் வைக்கப்பட்டு குறித்த பகுதியை முடக்குவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் தான் கலந்துரையாடவுள்ளார் எனவும், குறித்த மாநகரப் பகுதியில் தொற்று ஏற்படாதவாறு முன்னெடுக்கப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகளை உடனடியாக ஆராயும்படி ஆளுநர் பணித்தமைக்கு அமைய குறித்த நடைமுறை நேற்றிலிருந்து பின்பற்றப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகள் இணக்கம் கண்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள் நேற்றைய தினம் மாட்டீன் வீதியில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையகத்தில் கூடி ஆராய்ந்தனர். இதன்போதே மேற்படி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு இந்த முடிவினை உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் கட்சி ஒன்றைப் பதிவதற்கான பூர்வாங்க விண்ணப்பம் ஒன்று தேர்தல் ஆணயத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நீண்ட பல வருட காலமாக அது நிலுவையில் உள்ளது. எனினும் பதிவைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அப்படிக் கூட்டமைப்பை ஒரு தனிக் கட்சியாகப் பதிவுசெய்வதற்கு தமிழரசுக் கட்சியினருக்கு விருப்பமில்லை என்பது தெரிந்ததே.

ஆனாலும், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற பெயரில் வேறு யாரும் ஒரு கட்சியைப் பதிவு செய்ய முயற்சிப்பதற்கு இடமளிக்காமல், அந்தப் பெயருக்குத் தடுப்புப் போடுவதற்காகவே இப்படி அந்தப் பெயரில் ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், பதிவு முயற்சி பூர்த்தி செய்யப்படாமல் அது இழுபட விடுபட்டிருக்கின்றது.

அப்படியான விண்ணப்பம் தொடர்பில் ஒரு செயலாளரைப் பிரேரித்து, அதனைத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புவதன் மூலமே எதிர்காலத்தில் கூட்டமைப்பின் பெயரில் வேறு யாரும் கட்சி ஒன்றினைப் பதிவு செய்ய இடமளிக்காமல் தடுக்க முடியும் என வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் தமிழ் அரசுக் கட்சியின் துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் நேற்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டினார் எனத் தெரிகின்றது.

இதன்போது அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் கோரினார். அந்த வர்த்தமானி அறிவித்தலை சிவஞானம் உடன் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து அப் பதவிக்கு மாவை சேனாதிராசாவை நியமிக்கலாம் என சித்தார்த்தன் தெரிவித்தார். அதனை ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனும் ஏற்றுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசா, சி.வீ.கே.சிவஞானம், ப.சத்தியலிங்கம் , எஸ்.எக்ஸ்.குலநாயகம், கனகசபாபதி ஆகியோரும், புளொட் அமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன், கஜதீபன், பவான் உட்பட ஐவரும் , ரெலோவின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக் கலநாதன், வினோநோதராதலிங்கம் உட்பட மூவரும் கலந்துகொண்டனர்.

## ஐ.நா. நிகழ்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிம்பம் துடைத்தெறியப்படுவதற்குத் துணைபுரியக்கூடிய செயல்களில் ஐக்கிய நாடுகள் சபை ஈடுபடக்கூடாது. ஆனால், கடந்த வாரம் அத்தகையதொரு செயலையே இலங்கையின் ஐ.நா. அலுவலகம் செய்தது எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தால் இணையவழி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் பிரதம விருந்தினராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருந்தார்.

இது குறித்து சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐக்கிய நாடுகள் பணிப்பாளர் லூயிஸ் சார்போனே அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழில் 11 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடையவர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்களுடன் தொடர்புபட்ட 11 பேருக்கு நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர்.பரிசோதனையிலேயே எவருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(இது தொடர்பில் முன்னர் வந்த செய்தி 05 ஆம் பக்கத்தில்)

## நேற்றும் 239...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 ஆயிரத்து 663 ஆக உயர்வடைந்துள்ளது. வைத்தியசாலைகளில் தற்போது 6 ஆயிரத்து 244 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 ஆயிரத்து 399 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேவேளை, 20 பேர் சிகிச்சைகளின் போது உயிரிழந்துள்ளனர்.

## உள்ளூராட்சிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைகளின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் நேற்று யாழ். மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். இதன்போதே மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கும் அறிவிப்பதாகவும் இதன்போது முடிவு எட்டப்பட்டது என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

மேற்படி தீர்மானத்தைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா மற்றும் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் ஒப்பமிட்ட கடிதமாக அனுப்புது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் உடனடியாகவே கடிதம் தயாரிக்கப்பட்டு ஒப்பத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் சென்று தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களைச் சந்தித்த நிலையில் நேற்றைய கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வழிபாட்டில் ஈடுபட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவேளையில் அங்கு சென்ற புளியங்குளம் பொலிஸார் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவித்து பூசகர் உள்ளிட்ட 15 நபர்களைக் கைதுசெய்து புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளனர்.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை ஆலயத்தினுள் அனுமதிக்க வேண்டாம் என்று அப்பகுதி சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் ஆகியோரினால் அறிவித்தல் வழங்கப்பட்ட நிலையில் அதனை மீறிச் செயற்பட்டனர் என்று தெரிவித்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

# வடக்கில் தொற்றுப் பரவலைத் தடுப்பதில் மக்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கது!

## மெச்சுகின்றரார் இராணுவத் தளபதி கிளிநொச்சியில் வைத்துத் தெரிவிப்பு





யாழ்ப்பாணம், நவ.01

“வடக்கு மக்கள் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றி வருகின்றனர். அவர்களை நிச்சயம் பாராட்டியாக வேண்டும். – என்று இராணுவத் தளபதியும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்புச் செயலணியின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதி கிருஸ்ண புரம் கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற கொரோனா வைத்தியசாலையின் பணிகளை பார்வையிட்ட பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று சமூகப் பரவலா, இல்லையா என்பதை வைத்தியர்கள்தான் தீர்மானிப்பார்கள். நாங்கள் படைத்தரப்பினர். தீர்மானிப்பவர்கள் அல்லர். வைத்தியர்கள் இதுவரை அவ்வாறு கூறவில்லை.

சமூகப்பரவல் என்பது ‘தொற்றானது எவரிடமிருந்து ஒருவருக்குத் தொற்றியது என்பது தெரியாத நிலையாகும்’. இதுவரையில் நோயாளியாக இனங்காணப்படும் ஒவ்வொருவரும் இன்னொரு நோயாளியுடன் ஏதோவகையில் தொடர்புபட்டவர்களாகவே உள்ளனர். இதனால்தான் வைத்தியர்கள் இது வரை சமூகப்பரவல் இல்லை என்று கூறுகிறார்கள். அதை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

சமூகப்பரவலா அல்லது தொடர்புகள் உள்ளனவா, இல்லையா என்பது இங்கு முக்கியம் அல்ல. எமது நாட்டில் தற்போது கொரனாத் தொற்று உள்ளதால் நாம் அனைவரும் மிகஅவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும். நாட்டுமக்கள் அனைவரும் சுகாதார பிரிவினரது அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்குத் தமது பாரிய பங்களிப்பினை வழங்கவேண்டும்.

சுகாதார அறிவுறுத்தல்கள் மிகவும் இலகுவானவை. அதாவது முகக் கவசம் அணிதல், கைகளை நன்கு கழுவுதல் மற்றும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல. ஆகியனவற்றை அனைவரும் பின்பற்ற வேண்டும். அத்துடன் பெருமளவு மக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதும் முக்கியமாகும். பொதுமக்கள் இதனை நிச்சயம் கடைப்பிடிப்பார்கள் என நான் நம்புகிறேன்.

வடமாகாண மக்கள் இந்த சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து செயற்படுவதால் நாம் அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம். அவர்களை நிச்சயமாக நாம் பாராட்டுகிறோம்.– என்றார்.

## முகக்கவசம் அணியாமல் நடமாடிய 39 பேர் கைது

முகக்கவசம் அணியாமல் பொதுவெளியில் நடமாடிய 39 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்திவந்தோம். அதனைக் கட்டாயப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. அதன்பின்னர் மக் களுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் முகக்கவசம் அணியாத, சமூக இடைவெளியைப் பின்பற்றாத, அதேபோல் சுகாதார நடைமுறைகளை மீறும் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமானது. நேற்று மாத்திரம் முகக்கசவம் அணியாத, சமூகஇடைவெளியை பின்பற்றி செயற்படாத 39 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நடவடிக்கை தொடரும். கைதானவர்களுக்கு ஆறு மாத சிறை தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும்.

அதேவேளை, நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்துக்குள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 221 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 44 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அதேபோல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளில் இருந்து இன்று காலைவரை மொத்தமாக ஆயிரத்து 450 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் – என்றார்.

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியோர் 454 பேர் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டனர்!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

ஊரடங்கு உத்தரவுக்கு முன்னர் மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறிய 454 பேர் நாட்டின் பல பகுதிகளில் கண்டறிப்பட்டுள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி சென்ற அவர்கள் கண்டறியப்பட்டு தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் பண்டாரவளை, மட்டக்களப்பு, அம்பாறை, தங்காலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



கடந்த 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் மேல் மாகாணத்தை விட்டு வெளியேறியவர்கள் சுய தனிமைப் படுத்தப்படவுள்ளனர் என அஜித் ரோஹண நேற்றுக் காலை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேல் மாகாணத்துக்கு வெளியில் திருமணங்களை நடத்த அனுமதி!

மேல் மாகாணத்துக்கு அப்பால் உள்ள பகுதிகளில் திருமண வைபவ ஏற்பாடுகளை சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைவாக மேற்கொள்ள முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தந்தப் பிரதேச சுகாதார அதிகாரிகளால் இந்த வைபவங்களில் கலந்து கொள்வோர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

ஊரடங்கு அமுலில் இல்லாத பிரதேசங்களில் திருமண வைபவங்களை நடத்துவதற்கு எந்தவித தடையும் விதிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் திருமண வைபவம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இந்த ஹோட்டலில் 35 பேரின் பங்களிப்புடன் திருமண வைபவம் நடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஹோட்டல் முகாமையாளருக்கும், ஏற்பாடு செய்தவர்களுக்கும் எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதற்கமைவாக ஹோட்டல் பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் வாக்கு மூலத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 39 தொழிற்சாலைகளின் 462 தொழிலாளர்களுக்கு கம்பஹாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி!

கம்பஹாவில் 39 தொழிற்சாலைகளைச் சேர்ந்த 462 தொழிலாளர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் தொடர்பாக, கம்பஹாவில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்களிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹாவின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்த விடயம் தொடர்பாக மேலும் கூறியுள்ளதாவது –

இலங்கை முதலீட்டு சபையின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 414 தொழிலாளர்களும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 12 தொழிலாளர்களும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத்தவிர மேலும் பத்து தொழிற்சாலைகளைச் சேர்ந்த 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்!



கொரோனா தொற்று பரம்பலை அடுத்து கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்காக உலர் உணவு நிவாணரப் பொதிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பமாகிறது.

ஒவ்வொரு பொதியும் பத்தாயிரம் ரூபா பெறுமதியானவை. இவற்றில் 14 நாள்களுக்குத் தேவையான உலர் உணவும், பழ வகைகளும் உள்ளடங்கி இருக்கின்றன. இதற்காக 68 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

நிவாரண பொதிகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் முன்னெடுக்கப்படும். இங்கு 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 ஆயிரத்து 800 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, முடக்க நிலை காரணமாக ஒரு மாத காலத்துக்கு மேலாக வாழ்வாதாரங்களை இழந்த குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சம்பந்தனுக்கு புதுடில்லி உணர்த்தியுள்ள கருத்துகள்

மிகவும் முக்கியமான ஒரு கால கட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைத் தனித்து தமது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அழைத்து அவருடன் விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே.

இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் இதுவரைத் தெளிவாக வெளிவரவில்லை.

சம்பந்தன் மட்டும் தமது வழமையான பாணியில் *"அவர்கள் கேட்க வேண்டிய விடயங்களைக் கேட்டார்கள். நாங்கள் சொல்ல வேண்டிய விடயங்களை விரிவாகச் சொல்லியிருக்கின்றோம். தொடர்ந்தும் பேசுவோம்."* – என்ற தமது ஒரே பல்லவியை மீண்டும் ஒரு தடவை அவிழ்த்து விட்டிருக்கின்றார். யாருடன், எப்போது சம்பந்தன் பேசினாலும் அந்தச் பேச்சின் பின்னர் இப்படி ஒரு பதிலைக் கூறமுடியும். அந்த விதத்தில்தான் ஊடகங்களின் கேள்விக்கு அவர் பதில் சொல்லியிருக்கின்றார்.

ஆனால் இந்தச் சந்திப்பின்போது இந்தியத் தரப்பினால் சம்பந்தருக்கு உணர்த்தப்பட்ட விடயங்கள் குறித்து சில உள்வீட்டுத் தகவல்கள் கசிந்திருக்கின்றன. அத்தகவல்கள், இன்றைய காலகட்டத்தில் மீண்டும் ஈழத்தமிழர் விவகாரத்தை கையில் எடுப்பதில் புதுடில்லி எவ்வளவு கரிசனையாக இருக்கின்றது என்பதற்கான சான்று எனக் கொள்ள முடியும்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் புதுடில்லியின் பங்களிப்புத் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு – கருத்து நிலைப்பாடு – யாது என்பது தொடர்பில் திட்டவட்டமான, தெளிவான, ஓர் அறுத்து உறுத்த பதிலை புதுடில்லி எதிர்பார்ப்பதாக சம்பந்தனுக்கு உணர்த்தப்பட்டது என்று அறிய வந்தது.

*'புதுடில்லி தலையீடு செய்ய வேண்டும், தலையீடு செய்ய வேண்டும் என்று கூறுகின்றீர்கள். எத்தகைய தலையீட்டை – பங்களிப்பை – இந்தியா வழங்க வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துங்கள். அந்த விடயத்தில் ஒளித்துப் பிடித்து விளையாடும் போக்கு வேண்டாம். எதை, எப்படி புதுடில்லி செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்!'* – என சம்பந்தனுக்குக் கூறப்பட்டதாம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பெறுபேறாக வந்ததே 13 ஆவது அரசமைப்புத் திருத்தம். அது தொடர்பில் கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பதை இதுவரை சம்பந்தன் அணியினர் புதுடில்லிக்குத் தெளிவுபடுத்தவேயில்லை என்ற புதுடில்லியின் குறை சம்பந்தனுக்கு இந்தச் சந்திப்பின்போது உணர்த்தப்பட்டிருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாக ஏற்று விடயங்களை நகர்த்தலாம் என்பதில் தொடங்கி, 13ஆவது திருத்தம் தொடர்பில் பல திட்டங்கள், யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் இவை எவை தொடர்பிலும் தனது நிலைப்பாடு யாது என்பதை கூட்டமைப்பு புதுடில்லிக்குத் தெளிவுபடுத்தி, உறுதியாகப் பதில் சொல்லவில்லை என்பது புதுடில்லியின் அதிருப்தியாக உள்ளது.

எனவே இனிமேலும், தங்கள் எதிர்பார்ப்பு, கோரிக்கை இது தான் என்பதை குறைந்த பட்சம் மூடிய அறைக்குள்ளாவது புதுடில்லிக்குத் தெளிவுபடுத்தி விட்டு, புதுடில்லியின் தலையீட்டைக் கோருவது பற்றி வெளியில் பேசுங்கள் என்ற சாரப்பட சம்பந்தன் அறிவுறுத்தப்பட்டார் என அறியவந்தது.

*'உங்களுக்கு வயதாகி விட்டது என்ற கருத்தியலில் இது சொல்லப்படவில்லை'* என்ற பீடிகையுடன் இன்னொரு விவகாரமும் சம்பந்தருக்கு உணர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

*'தமிழர் தரப்பு புதுடில்லியுடனான ஊடாட்டத்தை மட்டுமல்லாமல், தன்னுடைய அரசியல் தீர்வு தொடர்பான சகல விவகாரங்களையும் ஒற்றுமையாக – ஐக்கியப்பட்டு – அணுக வேண்டும். அத்தோடு உங்களுக்கு அடுத்த கட்டத் தலைமை யார் என்பது தெளிவாகக் கோடி காட்டப்பட வேண்டும் எனப் புதுடில்லி எதிர்பார்க்கின்றது.'* – என்ற செய்தியும் சம்பந்தனுக்கு நாசூக்கான – நாகரிகமான – வார்த்தைகளில் விநயமாக உரைக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

*'நெருக்கடியான – நீண்ட சர்ச்சைக்குரிய – பின்விளைவுகளைத் தரக் கூடிய – விவகாரங்கள் மற்றும் திட்டங்களுக்குள் இறங்க முன்னர், அந்த விடயங்கள் தொடர்பில் தமிழர் தரப்பில் கையாளும் தலைமைகள் குறித்து தெளிவான வரையறை இருக்க வேண்டும். இன்னார், இன்னார் என்று ஐயத்துக்கு இடமற்ற நிலைமை நிலவ வேண்டும். இவை தொடர்பில் உங்கள் தரப்பில் சில சீர் நடவடிக்கைகளை முன்னெடுத்துத் தெளிவுபடுத்துங்கள்'* – என்று சம்பந்தன் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றார்.

ஆகையால் இனிமேல், 'தமிழர்களுக்கு நீதி, நியாயமான – நின்று நிலைக்கக் கூடிய – தீர்வு கிட்டுவதற்கு இந்தியா பங்களிக்க வேண்டும்' – என்று சம்பந்தன் மொட்டையாகப் பேட்டியளிப்பதோ, கோரிக்கை விடுப்பதோ சரிவராது என்பது அவருக்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இந்தியாவை மீண்டும் களத்துக்குள் இழுக்க முன்னர் தமிழர் தரப்பில் சில *'ஹோம் வேர்க்குகளை'* (வீட்டு வேலைகளை) சம்பந்தன் செய்ய வேண்டியவராக இருக்கின்றார். அவற்றை அவர் செய்வரா? அதற்கான தெம்பு, பலம், கூட்டமைப்பில் ஒத்துழைப்பு போன்றவை அவருக்கு உண்டா? தெரியவில்லை...!

# ஊரடங்கை மீறுவோர்க்கு சட்டநடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதி கடும் உத்தரவு



மிக அவசர தேவையைத் தவிர தனிமைப் படுத்தல் ஊரடங்கு அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை செயற்படுத்துமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொருள்கள் விநியோகத்தின் போது கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவு அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் பாதிப்புள்ள பகுதிகளில் திருமண நிகழ்வு மற்றும் மத வழிபாடு உட்பட மக்கள் ஒன்று கூடுகின்றமையை தவிர்க்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# இலங்கை - சீன உறவு தொடர்ந்து முன்னெடுப்பு

## புதிய சீனத் தூதுவர் தெரிவிப்பு



இலங்கை – சீன உறவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தமது அபிலாஷை என இலங்கைக்கான புதிய சீனத் தூதுவர் ஜன் ஹுங் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்து தமக்குரிய பதவியை பொறுப்பேற்கும் உரையை நிகழ்த்தியபோதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

சீன அரசாங்கமும் மக்களும் ஒப்படைத்த பொறுப்பை ஏற்றுக்கொண்ட தூதுவராக தாம் இலங்கை என்ற நேச நாட்டுக்கு வருகிறார் என அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவு மூலோபாயம், பங்காளித்துவமாகப் பரிணமித்துள்ளது. பல்வேறு துறைகளில் நீடிக்கும் ஒத்துழைப்பின் மூலம் சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன. பிராந்திய மற்றும் சர்வதேச அலுவல்களில் சிறந்த கருத்தாடல்கள் ஏற்பட்டுள்ளன.

கொரோனா நெருக்கடிக்கு எதிரான போராட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வலுப்படுத்தப்பட்டுள்ளது என புதிய சீனத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கேகாலையில் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

கேகாலை, நவ.01

கேகாலை – புளத்கொஹுபிட்டி பகுதியில் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, புளத்கொஹுபிட்டி மற்றும் லேவல ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்தத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை அடையாளப்படுத்தி தனிமைப்படுத்தலுக்கு அனுப்பும் வரை இந்தத் தடை விதிக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இன்று காலை வரையான காலப்பகுதியில் மொத்தம் 10 ஆயிரத்து 424 கொரோனா வைரஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் அறிக்கையின் பிரகாரம் 6 ஆயிரத்து 123 நோயாளிகள் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 4 ஆயிரம் 282 நோயாளிகள் முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

இந்தக் கொரோனா வைரஸ் தொற்றால், இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் மேலும் சில பகுதி தனிமைப்படுத்தல்

கொழும்பு – மிரிஹானை பகுதிக்கு உட்பட்ட சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

வெல்சிறிபுர, ராவுலபுர மற்றும் ப்ரகதிபுர ஆகிய பகுதிகயே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கொவிட் –19 ஐ தடுப்பதற்காக தேசிய செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பப்பட்டுள்ளது.

## காட்டு யானை தாக்கி 4 வயதுக் குழந்தை பலி

கருவலகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரஜவிகம பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளான நான்கு வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் உறவினர் ஒருவருடன் வீதியில் பயணித்த குறித்த நான்கு வயது குழந்தை மீது காட்டு யானை ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் படுகாயமடைந்த குழந்தை அங்கிருந்தவர்களால் உடனடியாக ஆனமடுவ வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போதிலும், அக்குழந்தை அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் சடலம் ஆனமடுவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2020
'மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.'
– சீனப் பழமொழி

# மரங்களுடனான பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்

## மரநடுகை மாதச் செய்தியில் பொ. ஐங்கரநேசன்

மரங்கள் மனிதர்கள் உயிர் வாழுவதற்குத் தேவையான பிராண வாயுவைத் தரும் கரிப்பிடிக்கும் காற்றைச் சுத்திகரிக்கும்; வெம்மை தணிவிக்க மழையைத் தரும் என்று கற்றுத்தருகின்ற அறிவியலும், வெட்டு மரங்களாகக் கைநிறையக் காசு தரும் என்று போதிக்கும் பொருளியலும் மரங்களுக்கும் எங்களுக்கும் இடையே காலங்காலமாக நிலவி வந்த பண்பாட்டு உறவைத் துண்டித்துவிட்டன. மரங்களுடனான பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும். இழந்துவிட்ட இந்தப் பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கும் ஓர் தமிழ்த் தேசியச் செயற்பாடே கார்த்திகை மாத மரநடுகை ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.



வடக்கு மாகாண சபையால் 2014ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகக் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த ஊடகச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்களுக்கும் மரங்களுக்கும் இடையேயிருந்த பண்பாட்டுப் பந்தம் மிகவும் உணர்வு பூர்வமானது. மூதாதித் தமிழர்கள் மரங்களை இறையாக வழிபட்டார்கள். உருவ வழிபாடு ஆரம்பித்ததும் மரங்களை இறைக்கு நிழற் குடைகளாக்கி வலம் வந்தார்கள். மரங்களைக் குலக் குறிகளாக்கிக் கொண்டாடினார்கள். போர்க்களத்தில் பூமாலைகள் அணிந்தே எதிரிகளுடன் பொருதினார்கள். மங்கையர்கள் மரங்களைக் காதலர்களாக உருவகித்து நாணி நின்றார்கள். மறைந்த உறவினர்களின் நினைவுகளை மரங்களில் ஏற்றிக் கைதொழுதார்கள்.

'ஒரு மரத்தை அழித்துத்தான் என் உயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில் மரம் வாழட்டும் நான் சாகிறேன்' என்ற சங்கப் புலவனின் வாரிசுகளான நாமோ, இன்று எவ்வித் கருணையும் இன்றி மரக் கொலைகளைச் செய்து வருகிறோம். அறிவியல் வளர்ச்சி மரங்களுடன் நாம் கொண்டிருந்த பண்பாட்டு உறவைப் புறமொதுக்கியுள்ளது. அறிவியல் எப்போதும் அபிவிருத்தியின் பக்கம் சார்ந்ததாகவே இயங்கும். அபிவிருத்தி தன் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும், அது மனிதர்களாக இருந்தாலும் அழிப்பதற்குத் தயங்காது. இதனாலேயே வீதி அகலிப்பின்போதும், தொலைத்தொடர்பு வழித்தடங்கள், மின்வழித்தடங்களை அமைக்கும் போதும் மாற்றுவழி பற்றிச் சிந்திக்காது மரங்களைக் குற்றுயிரும் குலையுயிருமாகச் சாய்த்து வருகிறோம்.

உலகம் – பூமி – சூடேறிக் கொண்டிருப்பதால் படுபாதகமான காலநிலை மாற்றங்களை இன்று எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. இன்னொரு புறம் காட்டு வைரசுக்கள் விகாரிகளாகித் தாக்குவதால் கொரோனா, சார்ஸ் போன்ற கொடிய நோய்களின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. இப்பேரிடர்கள் யாவும் காடுகளை அழித்ததால், இயற்கையைச் சிதைத்ததால் ஏற்பட்டதன் விளைவுகளே என அறிவியல் மெய்ப்பித்ததன் பின்னர், இப்போது காடு வளர்ப்பும் மரங்களின் நடுகையும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால், இம் முயற்சிகள் தனியே அறிவியல் அணுகுமுறையுடன் மாத்திரம் அமையாது பண்பாட்டுப் பிரக்ஞையுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மரநடுகையை மேற்கொள்வதற்குக் கார் என்ற மழையின் பெயரைத் தன்பெயராகக் கொண்ட கார்த்திகை மிகப் பொருத்தமான மாதம். அறிவியல் ரீதியான காரணத்துக்கும் அப்பால், ஈழத்தமிழர் வாழ்வியலில் கார்த்திகைப் பண்பாட்டு முக்கியத்துவம் பெற்ற ஓர் மாதமுமாகும். வீடுகளில் விளக்கேற்றி வழிபடும் தீபத் திருநாளையும், இறந்த மறவர்களின் நினைவுகளை நெஞ்சிருத்தி நெக்குருகும் நாட்களையும் இம்மாதம் தன்னகத்தே கொண்டுள்ளது. தேசியம் என்பது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, நம்பிக்கைகள் ஆகியன பின்னிப்பிணைந்த ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வகையில் கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும்.– என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். மாநகர எல்லைக்குள் நேற்று 11 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் நேற்று அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளருடன் தொடர்புகளைக் கொண்டிருந்த 11 பேரிடம் இருந்து நேற்று காலை மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பெறுபேறு நேற்று இரவு கிடைக்கும் என்று யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றுப் பகல் தெரிவித்தன.

அதேவேளை, யாழ். நகரில் உள்ள மீன் சந்தைகளில் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பேலியகொட மீன் சந்தையைத் தொடர்ந்து திருகோணமலை மீன் சந்தையில் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டதாலும், நுகர்வோர் இது தொடர்பில் அச்சம் கொள்வதைத் தடுக்கும் நோக்கிலுமே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குருநகர், பாசையூர், சின்னக்கடை, நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட 6 அங்காடிகளில் இருந்தும் தலா 5 பேர் வீதம் சோதனை மேற்கொண்டபோதும் இவர்களின் பெறுபேறு இதுவரை வெளிவராத போதும் அவை இன்று வெளிவருவதிலும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

# இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 41 ஆயிரத்து 500 மாணவர்கள் சேர்ப்பு

இலங்கையில் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 41 ஆயிரத்து 500 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்தத் தகவலை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை புதிதாக 10 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மருத்துவ பீடங்களுக்கு 371 மாணவர்களும், பொறியியல் பீடங்களுக்கு 405 மாணவர்களும் இம்முறை இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இந்தநிலையில், 2020 ஒக்டோபர் 28ஆம் திகதி கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத கற்கை நிறுவனத்தைப் பூரணமான பல்கலைக் கழகம் என அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 21ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் பல்கலைக் கழக மானிய ஆணையத்துடன் கலந்தாலோசித்து கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

# அதிக அபாயமுள்ள பகுதிகளில் பயணக் கட்டுப்பாட்டை இறுக்குக!

## அரச மருத்துவர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.01

அதிக அபாயமுள்ள பகுதிகளில் பயணக்கட்டுப்பாடுகள் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர்–

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் 80 வீதம் வரை பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமெனில், அதிக ஆபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும்.

ஏற்கனவே பெறப்பட்ட சுமார் 20 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகள், பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. அவற்றை விரைவாக பரிசோதனைக்கு உட்படுத்தாத பட்சத்தில், உரிய பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது போகும்.

அத்துடன், கொரோனா தொற்றின் தாக்கம் நாடு முழுவதும் பரவுவதைத் தடுக்கும் வகையில் சீரான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மஹிந்தவை பொம்பியோ புறக்கணித்தமைக்கு சமாளிப்பு காரணம் கூறும் பிரதமர் அலுவலகம்!

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் குறுகியகால விஜயத்தின்போது இலங்கை அரசின் தலைமைகளில் ஒருவரை மாத்திரம் சந்திப்பது போதுமானதாகக் கருதப்பட்டது. அதனாலேயே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மைக் பொம்பியோவைச் சந்திக்கவில்லை என்பதுடன் முன்னரேயே சந்திப்பதற்கும் திட்டமிடப்பட்டிருக்கவும் இல்லை.

– இவ்வாறு பிரதமர் அலுவலகத்தின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் அனுராதா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அனுராதா ஹேரத் தனது ருவிட்டர் பக்கத்தில்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்திக்காமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

உண்மையில் ஆரம்பத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மைக் பொம்பியோவைச் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கவில்லை.

பொம்பியோவின் மிகக் குறுகியகால விஜயத்தின் போது இலங்கை அரசின் தலைமைகளில் ஒருவரை மாத்திரம் சந்திப்பது போதுமானதாகக் கருதப்பட்டது – என்றுள்ளது.

# 78 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி!

கடந்த 4 ஆம் திகதி முதல் நேற்றுப் பிற்பகல் 4 மணி வரையான காலப்பகுதியில் 78 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அத்தோடு மேலும் 400 அதிகாரிகள் தனிமைப் படுத்தபட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்திருந்தார்.

மேலும், பேலியகொட மீன் சந்தை கொத்தணியுடன் தொடர்புபட்டவர்களாகவே இந்த பொலிஸ் அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அண்மையில், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மீன் கொள்வனவு செய்வதற்காக பேலியகொட மீன் சந்தைக்கு சென்றுள்ளமையாலேயே கொரோனா தொற்று பரவியுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரக் கோரிக்கை!

## வலி.கிழக்கு மக்கள் டக்ளஸிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.01

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் விவசாயிகள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரியப்படுத்தியமையுடன் அதற்கான தீர்வுகளை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று கடந்த வியாழக்கிழமை வலிகாமம் கிழக்கு விவசாயிகள் கலந்துரையாடியிருந்தனர். இதன்போதே அவர்கள் அமைச்சரிடம் இவ்வாறு கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது உருளைக் கிழங்கு விதைகளை மானிய அடிப்படையில் பெற்றுத் தருமாறும் கோரியமையுடன் நீர் இறைக்கும் இயந்திரங்களையும் மானிய அடிப்படையில் பெற்றுத்தருமாறு கேட்டிருந்தனர்.

அத்துடன் யூரியா மற்றும் அமோனிய உள்ளிட்ட உரங்களை விவசாயிகளுக்குத் தேவையான அளவு பெற்றுத் தருமாறு கோரியமையுடன் அம்பன் புயலால் சேதமடைந்த வாழைப் பயிர் செய்கைக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்திருந்தனர்.

மேலும் யாழ். மாவட்ட சந்தைகளில் விவசாய உற்பத்திகளுக்கு 10 இற்கு 1 என்ற கழிவு நடைமுறை காணப்படுவதால் விவசாயிகளிடையே பெரும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே அது தொடர்பிலும் அவதானம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்ட அமைச்சர், அவை தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி விரைவில் தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வார் எனத் தெரிவித்திருந்தமையுடன், அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வார் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்தச் சந்திப்பின்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் வடமாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார் மற்றும் கட்சியின் வலி. கிழக்கு நிர்வாகச் செயலாளர் இராமநாதன் ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹற்றன் டிக்கோயாவில் தொற்று நீக்கும் பணி!

கொரொனா வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஹற்றன் டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்குத் தொற்று நீக்கும் மருந்துகள் விசிறும் நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமைமுன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஹற்றனில் இருந்து போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் ஓட்டோக்களுக்கு இந்த தொற்று நீக்கும் மருந்துகள் விசிறப்பட்டுள்ளன.

ஹற்றன் டிக்கோயா நகர சபையின் வழிகாட்டலில் இந்த தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டன. இந்த பணிகள் நேற்று காலை ஹட்டன் பிரதான பஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஹற்றன் டிக்கோயா நகர சபையின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கும் நடவடிக்கையின்போது ஹற்றனில் இருந்து சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பஸ்கள், ஓட்டோக்களுக்கு தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டன.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் பிரதேசசபை உறுப்பினருக்கும் முறுகல்!



ஹற்றன்,நவ.01

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக வர்த்தக நிலையங்களை மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் முயற்சித்தமையால் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஹற்றன் - டிக்கோயா நகரசபையின் நிர்வாகத்துக்குட்பட்ட டிக்கோயா நகரிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா மற்றும் அளுத்கம பகுதிகளில் வீதிக்கு இருமருங்கிலும் வியாபாரம் செய்வதற்குத் தற்காலிகமாகத் தடைவிதிப்பதற்குப் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்தவேளையிலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் நகரம் மட்டுமே தனிமைப் படுத்தப்பட்டுள்ளது, இங்கு ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லை. எனவே, வர்த்தக நிலையங்களை மூடவேண்டிய தேவையில்லை.' - என்று பிரதேச சபை உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

ஹற்றன் நகரில் முதலாவது கொரோனா தொற்றாளர் கடந்த 25 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார். இதனையடுத்து 25 ஆம் திகதி முதலே ஹற்றன் நகரம் தனிமைப்படுத்தப்பட்டது. அன்று மாலை ஹற்றன் மற்றும் டிக்கோயா நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகரசபை தலைவரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 5 லட்சத்தைத் தாண்டியது பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, நவ.01

இலங்கையில் இதுவரை 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தால் 10 ஆயிரத்து 173 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கட்சியின் முடிவிலிருந்து விலகியோர்க்கு அடுத்தவாரம் ஒழுக்காற்று நடவடிக்கை!

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அடுத்த வாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன என்றும் அடுத்த கட்டமாக விசாரணைகளை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான டயானா கமகே, இஷாக் ரஹ்மான், எம்.ரஹீம், நசீர் அகமட், மொஹமட் ஹரிஸ், பைசல் காசிம், அரவிந்த்குமார் மற்றும் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அண்மையில், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல, அந்த உறுப்பினர்களை கட்சியில் இருந்து வெளியேற்றியமையால், அவர்களை அரசாங்கத்துடன் அமரவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். - கொழும்பு பஸ்ஸில் பயணித்தோர் சுகாதாரப் பணிமனையுடன் தொடர்புகொள்க!

கொழும்பு, நவ.01

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொழும்பில் உணவகம் நடத்தும் உரிமையாளருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவருடன் பஸ்ஸில் பயணித்தவர்களைத் தமது பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் சில மூடப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளன. அத்தோடும் மேலும் பல வர்த்தக நிலையங்கள் தொடர்பில் பொலிஸார், சுகாதாரத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அத்துடன், அவருடன் தொடர்புடைய நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சுயதனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்று சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளர் மற்றும் அவருடன் பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இருவர், வேலணையைச் சேர்ந்த ஒருவரும் என நால்வர் என்.சி.ஜி. என்ற பெயர்கொண்ட டபிள்யு பி. ஏன்.சி.8760 என்ற இலக்கமுடைய பஸ்ஸில் கொழும்பிலிருந்து கடந்த 25 ஆம் திகதி இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டுள்ளனர்.

அவர்கள் நால்வரும் மறுநாள் 26ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அங்கிருந்து உணவக உரிமையாளர் ஓட்டோவில் நல்லூர் பருத்தித்துறை வீதியில் உள்ள வீட்டுக்குச் சென்றுள்ளார். பணியாளர்களும் ஓட்டோவில் வேலணை, புங்குடு தீவுக்கு புறப்பட்டுள்ளனர்.

அத்துடன், உணவக உரிமையாளர் யாழ்ப்பாணம் நகரில் இரண்டு தினங்கள் நடமாடியுள்ளார். அத்துடன், வைமன் வீதியில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையம், கோயில் வீதியில் உள்ள உணவகம் என்பவற்றுக்கும் சென்றுள்ளார்.

அதனால் சிகையலங்கரிப்பு நிலையம், உணவகம் என்பன மூடப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்ந்தோர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளர் பயணித்த ஓட்டோவின் சாரதி கொட்டடியில் உள்ள அவரது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அதுதொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க ஓட்டோ உரிமையாளர் சங்கத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளரின் அயலவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் நூற்றுக் கணக்கானோர் சுயதனிமைப் படுத்தப்படவுள்ளனர். யாழ்ப்பாணம் நகரில் சில வர்த்தக நிலையங்கள் தொடர்பிலும் ஆராயப்படுகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்குப் புறப்பட்ட பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூக அக்கறையுடன் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# மாதகலில் முகிழ்த்து திருமலையில் மணம்பரப்பிய காந்திய மலர் கந்தையா

பகுதி - 01

## ஒரு சான்றோனின் சரிதை இது

இது ஒரு சாமானியனின் சாதாரண சரிதையன்று. இது ஒரு வித்தியாசமான சரிதை! தேடிச் சோறு நிதந்தின்று, பலசின்னச் சிறுகதைகள் பேசி, மனம்வாடிப் பிறர் வாடப் பல செயல்கள் செய்யும் வேடிக்கை மனிதர்களின் சரிதையன்று இது!

நல்ல சிந்தனை, உயரிய விழுமியங்களைத் தனது இலட்சியமாக்கி அவற்றை மக்கட்கு எடுத்துச் சொல்லி, தான் சொல்லும் அறிவுரைகளுக்கு இயன்றளவு வடிவம் கொடுத்த ஒரு யதார்த்த வாதியின் சரிதையிது!

தனது தொன்னூற்றொன்பதாம் அகவையில் தனதுயிர் பிரியும் வரை தனது இலட்சிய வேட்கை சற்றும் தணியாது தமது வாழ்க்கைத் தேரைக் காந்தியப் பாதையில் சாராத்தியஞ் செய்த ஒரு காந்தியத் தொண் டனின் சரிதையிது!

நான் கூறும் இம்மானுடனின் சரிதையில் இல்லது புனைதல் இல்லை!

எனது கல்வித்துறை, பத்திரிகைத்துறை அனுபவத்தில் நான் இதுவரை கண்டு கேட்டறியாத உண்மையான, போலித்தனம் இல்லாத, பிரசாரம் விரும்பாத ஒரு நல்ல சமூகத் தொண்டனின் சரிதையிது!

திருகோணமலை மண்ணில் கலவரம் வெடித்த போது, நாமுண்டு நமது குடும்பமுண்டு என்று நாமெல்லாம் தற்பாதுகாப்புத் தேடிய வேளையில, தனியானாய் நின்று சிவானந்த தபோவன அனாதைச் சிறார்களுக்குப் பல ஆண்டுகள் உறையுளுக்கும், உணவுக்கும், பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்த ஓர் ஈரநெஞ்சனின் சரிதையிது!

பல துறவிகளிடத்து நான் காணாத சமயப்பொறை மிக்கானின் சரிதையிது!

மக்கள் அலர்தூற்றிய போதும், கையறு நிஷ்யிலும், துன்பங்கள் வந்தபோதும், மனம் துவளாது, கொண்ட கொள்கையில் குன்றென நிமிர்ந்து நின்ற ஒரு தைரிய நெஞ்சனின் சரிதையிது!

'சிவானந்த மகரிஷி சிரார்த்தரத்தினம்' என்றும், இந்து சமய கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு 'இறைபணிச்செம்மல்'; என்றும், கொழும்புக் கம்பன் கழகம் 'மூதறிஞர்' என்றும், லண்டன் சிவயோகம் 'காந்தியச்சுடர்' என்றும் அளித்த பல பட்டங்கள் இவரை நாடி வந்த போதிலும், எந்தப் பட்டத்தையும் தன் பெயருக்கு முன்னாகவோ, பின்னாகவோ, போடாத பெருமகனின் சரிதையிது!

நான் இவர் புகழ் விரிப்பது இவருக்குப் புகழ் தேடவன்று! அவரோ புகழை நாடாத பண்பினர். இவர் வாழ்க்கை நமக்கு நல்ல உதாரணம், நமது இளைய சமுதாயத்துக்கு இவர்வாழ்க்கை ஒரு முன்னுதாரணம், என்பதால்!

இத்தகைய சால்பு மிக்கார் யார் தெரியுமா?

மாதகல் மண்ணில் முளைவிட்டு, திருகோணமலை மண்ணில் விரிந்து பணி செய்து, அண்மையில் மறைந்த, 'காந்தி ஐயா' என்று அனைவரும் அன்புடன் அழைத்த திரு. பொன்னம்பலம் கந்தையா அவர்கள்.

****

### ஆனந்தம், ஆனந்தம்!

"ஆனந்தம்! ஆனந்தம்!
ஆனந்தம்! ஆனந்தம்!"

- இவ்வாறு சதா, எதற்கெடுத்தாலும் சொன்னவர். தானும் ஆனந்தத்தில் வாழ்ந்து, ஏனையோரையும் ஆனந்தத்தில் வாழச்செய்ய விருமபியவர். அவர்தான் ஆன்மீகவாதி, எண்ணம், பேச்சு, நடை மூன்றிலும் காந்தியவாதியாக வாழ்ந்தவர், காந்தி ஐயா என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. பொன் னம்பலம் கந்தையா அவர்கள்.

எமது இளைமைக்காலத்தில் இளைஞர் அருள்நெறி



மன்ற உறுப்பினர்களாகிய நாம் மார்கழி மாதக்குளிரில் வைகறைப் பொழுது எழுந்து திருகோணமலைத் தெருவெல்லாம் திருவெம்பாவை முழுங்கச் செய்வோம். திருகோணமலை மடத்தடியில் இருந்த இளைஞர் அருள்நெறிமன்ற பணிமனையில் தொண்டர் இ. சண்முகராசா ஐயா தலைமையில் ஆரம்பமாகும் திருவெம்பாவை பஜனை நகரத்தூடாகப் போய் இறுதியில் திருக்கோணேஸ்வர ஆலயத்தைச் சென்றடையும்.

இந்த பஜனையில் எம்முடன் காந்தி மாஸ்டரும் தவறாது தினந்தோறும் கலந்து கொள்வார். அவரது வருகை எமக்குப் பேரூக்கமாக இருந்தது. எமது பஜனை கோணேஸ்வர ஆலயத்தைச் சென்றடையும். ஒரு நாள், ஆலயத்தை பஜனை அடையும்போது, வழியில் பாதையில் ஓரன்பர் கல்லடித்தது, முள்குத்தியது என்று சொன்னார். அப்போதுகூட காந்தி ஐயா 'ஆனந்தம் ஐயா ஆனந்தம்' என்றே சொன்னார்.



> நல்ல சிந்தனை, உயரிய விழுமியங்களைத் தனது இலட்சியமாக்கி அவற்றை மக்கட்கு எடுத்துச் சொல்லி, தான் சொல்லும் அறிவுரைகளுக்கு இயன்றளவு செயல் வடிவம் கொடுத்த ஒரு யதார்த்தவாதியின் சரிதையிது!

இப்படியே எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆனந்தம் என்ற சொல்லே அவருடைய தாரக மந்திரமாக இருப்பதற்கு அவரே விளக்கம் தருகிறார்:-

"எல்லோரும் இன்புற்று, ஆனந்தமாக இருக்கவேண்டும் என்பது எனது பெருவிருப்பம். இந்த விருப்பத்தினால் எனது அடியுள்ளத்தில் இருந்து இந்த வார்த்தை இயல்பாகவே ஒலித்து, வாய்வழியாக வெளிவருகிறது. எவரை நான் சந்திக்கிறேனோ, அவர் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காக 'ஆனந்தம், ஆனந்தம்' என்பேன். மனிதன் அடையும் இறுதி நிலையும் ஆனந்தம். அதனை நினைவுபடுத்துவதுபோல் என்னிடமிருந்து ஆனந்தம் என்ற வார்த்தை பிறக்கிறது." - இது அவரது விளக்கம்.

நாளென ஒன்று போல் காட்டி எமது உயிர் ஈரும் வாளது என்ற வள்ளுவன் கூற்றுக்கு ஏற்ப காலத்தை நாம் வீணாக்கக் கூடாது என்பதில் அவர் உறுதியானவர்.

"நேரத்தை மதித்து நடக்கவேண்டும். போனநேரம் திரும்பி வராது. மணிக்கூடு கட்டுவது முக்கியமில்லை. மணிப்படி நடப்பதே முக்கியம்." - என்பார் காந்தி ஐயா.

அவருடைய வீட்டுக்கு ஒரு முறை சென்றிருந்த போது, நான் நேரில் கண்ட காட்சியில் அவருடைய அருளுள்ளத்தைக் கண்டேன். அவர் ஓர் அலுவல் காரணமாக வெளியே கிளம்பவேண்டியிருந்தது. அவருடைய கோவைகள் மீது ஒரு பூனை உறங்கிக் கொண்டிருந்தது. அக் கோவையினை எடுத்துச் செல்ல வேண்டியிருந்ததால் அப்பூனையின் உறக்கத்தைக் குழப்ப விரும்பாத அவர் அப்பூனை துயில் விழிக்கும்வரை காத்து இருந்தார். இப்படி ஒரு பூனையின் சயன சுகத்தைக் கூடக் குழப்ப விரும்பாத சீவகாருண்யம் அவரிடம் இருந்தது.

### இங்கிதம் அறிந்த இனியவர்

இச்சான்றோனிடம் நான் கண்ட இங்கிதம் எனக்குப் பெருவியப்பைத் தந்தது. காந்தி அடிகளின் சரிதையை மாணவப் பருவத்தே யான் படித்தவேளை, என்னுள் எத்தை ஈர்த்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

காந்தி அடிகள் பிரித்தானிய அரசருடன் பேச்சு வார்த்தைக்காக இங்கிலாந்து சென்றிருந்த வேளை அது. அவருக்காக பிரபல ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இருப்பினும் பிரித்தானியாவில் தொழிலாள வர்க்கத்தினர் பெருமளவில் வாழ்ந்த பர்மிங்காம் பிரதேசத்தில் சாதாரண குடிமனையில் தங்கவே காந்தி அடிகள் விரும்பினார்.

அவ்வாறு, அங்கு தங்கிய போது, அதிகாலை எழுந்து உலாவச் செல்லும்போது அப்பிரதேசத் தொழிலாளர்கள், அவர்தம் குடும்பத்தினர், சிறுவர்கள், இளைஞர்கள் ஆகியோர் காந்தியடிகளை அன்புடன் சூழ்ந்து கொள்வர். அவர்களுடன் அவ்வாறு உரையாடும் போது இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தை விளக்கவும், நியாயப்படுத்தவும் காந்தி அடிகளுக்கு அரிய வாய்ப்புக் கிடைத்தது.

பிரித்தானிய அரசுடனான பேச்சுவார்த்தை முடிவுந்தறுவாயில், இந்தியப் பிரதிநிதிகளுக்கு பிரித்தானிய மன்னரின் அரண்மனையான பக்கிங்காம் பலஸில் விருந்து கொடுக்க ஏற்பாடானது.

இந்தியப் பிரதிநிதிகளுக்கு விருந்துபசாரத்திற்கான அழைப்பை அனுப்பும் கருமங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அத்தகைய அழைப்பில் விருந்தின் போது அணிய வேண்டிய உடை பற்றிய குறிப்பும் இடம்பெறுவது மரபாகும். அரண்மனை விருந்தென்றால் கோட், சூட், டை என ஆடம்பர உடை வலியுறுத்தப்படும். பிரித்தானிய மன்னரின் செயலாளருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டது. இவ்வாறு மேலைத்தேய சம்பிரதாயத்தை வலியுறுத்தினால், அந்த அழைப்பினை காந்தியடிகள் ஏற்கமாட்டார். மறுபுறம் உடை தொடர்பான சம்பிராயத்தைக் காந்தியடிகளுக்காகத் தளர்த்தினால் மன்னர் கொதித்தெழுவார். மன்னரின் செயலாளருக்கு இப்படி ஓர் இக்கட்டான நிலை.

செயலாளர் மன்னரை அணுகி நிலைமையை நாசூக்காக எடுத்துச் சொன்னார்.

'என்ன அந்தப் பக்கிரி அரைநிர்வாணமாக, அரண்மனை விருந்தாளியாக, வருவதா? முடியவே முடியாது' என்று பொரிந்து தள்ளினார் அவர்.

'இப்பொழுது பேச்சுவார்த்தை மூலம் சமரசம் ஏற்பட முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. விருந்தும் அதன் ஓர் அங்கம். இந்தச் சர்ச்சையால் ஒரு விரிசலை ஏற்படுத்துவது விவேகம் ஆகாது' என்று நயமாக எடுத்துச் சொல்லி காந்தியடிகளுக்கு அனுப்பும் அழைப்பிதழில் உடை பற்றிய குறிப்பைத் தவிர்ப்பது என்ற முடிவுக்கு மன்னரை இசையச் செய்தார் செயலாளர்.

ஒருவாறு அழைப்பினை ஏற்ற காந்தியடிகளும், ஏனைய பிரதிநிதிகளும் விருந்தில் கலந்து கொண்டனர். விருந்து முடிந்ததும் இந்தியப் பிரதிநிதிகளான விருந்தினரை மன்னருக்குச் அறிமுகம் செய்து வைக்கும் கட்டம். காந்தியடிகளை அறிமுகம் செய்து வைக்கும் போது மன்னர் எப்படி எதிரொலிப்பார், எரிந்து விழுவாரா என்றெல்லாம் செயலாளருக்கு ஒரே பதற்றம்.

காந்தியடிகள் மன்னருக்கு அறிமுகம் செய்துவைக்கப்படுகிறார். அப்போது செயலாளர் எதிர்பார்த்தவாறு சீற்றத்துடன் மன்னர் பேசினார்.

"மிஸ்டர் காந்தி! உமது ஆள்கள் எமது உத்தியோகத்தர்களைத் தாக்குவதைக் கொலை செய்வதை நான் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன். பிரித்தானியா சாம்ராஜ்யத்தை கலைப்பதற்காக நான் மன்னனாக முடிசூடவில்லை என்பது நினைவில் இருக்கட்டும்" - இப்படி மன்னர் எச்சரிக்கை செய்தார். என்ன விபரீதம் ஏற்படுமோ என்ற அச்சம் செயலாளருக்கு.

இங்கேதான் காந்தி அடிகளின் இங்கிதம் இமயமென ஓங்கி நிற்கிறது. இத்தகைய தரும சங்கடமான சூழ்நிலையில் காந்தியடிகள் தனக்கே உரிய சாந்தத்துடன், தனக்கே உரிய புன்முறுவலுடன் மன்னரை நோக்கி கூறிய பதில் நம்மை வியக்க வைக்கிறது. உலகுக்கே தனி நாகரீகத்தை உணர்த்தி நிற்கிறது.

'மாண்புமிகு மன்னரின் விருந்தினராக, அழைப்பின் மீது வருகை தந்து, அரண்மனை விருந்தினை அருந்தியுள்ள இவ்வேளையில் சர்ச்சைக்குரிய விடயங்களைப் பேச நான் விரும்பவில்லை. இது அதற்குரிய தருணமும் அன்று. அது ஆரோக்கியமான முறைமை, மரபன்று" - இப்படி மன உறுதியுடன், இங்கிதம்பேணி பதிலளித்தார் காந்தியடிகள்.

காந்தியடிகளின் இங்கிதம் கண்டு வியந்து போனார் மன்னரின் செயலாளர்.

'உலகியல் வாழ்வில் திளைத்துப் போன மன்னருக் குச்சமூக நாகரீகத்தைப் பேணத் தெரியவில்லை. ஆனால் ஆன்மீக வாழ்வில் ஊறிப்போன காந்தி அடிகளிடம் இவ்வண்ணம் தனிநாகரீகம் எப்படி மலர்ந்தது என்பது தெரியவில்லை' என்று அதிசயித்தார் மன்னனின் செயலாளர் .

இத்தகைய இனிய இங்கிதத்தை காந்தி மாஸ்டரிடம் நாம் கண்டுள்ளோம்.

(மிகுதி நாளை வெளிவரும்)

காலைக்கதிர்
Kalaikkathir

# அமெரிக்காவின் பிடியிலிருந்து கோட்டா அரசு தப்பவே முடியாது

## மைக் பொம்பியோவின் கருத்து எடுத்துக்காட்டு என்கிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்




கொழும்பு, ஒக்.31

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்த வரைக்கும் அதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதைத்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்துரைத்து விட்டுச் சென்றுள்ளார். எனவே, ஐ.நா. தீர்மானத்தை முன்வைத்த அமெரிக்காவின் இந்தக் கோரிக்கையை கோட்டாபய அரசு நிராகரிக்க முடியாது. அதை நிறைவேற்றும் கடப்பாட்டிலிருந்து இந்த அரசு விலகவும் முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் பேசினார். இதன்போது பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்யக் கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டு சர்வதேசநாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்திலுள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான வகையில் இலங்கை அரசு செயற்பட வேண்டும்.

இதைத்தான் இலங்கை வந்து சென்றுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார்.

ஆனபடியால் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்த வரைக்கும் அதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். - என்றார்.

## யாழில் 14 பேருக்குக் கொரோனா; 956 பேர் சுயதனிமைப்படுத்தலில்!

### மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மொத்தமாக 14 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். இம்மாவட்டத்தில் தற்போதைய நிலையில் 459 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்போதுள்ள யாழ். மாவட்ட நிலைமைகள் தொடர்பில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டக் கொரோனாத் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கின்றது. இந்நிலையில் மேலும் 6 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 14 பேர் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலையில் 459 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேர் சுய தனிமைப்படுத்திக் உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கடந்த 26ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த நபர் ஒருவருக்குத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. அவர் சென்ற இடங்கள் தற்போது முடக்க நிலைக்கு உள்ளாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதேநேரம் அவருடன் தொடர்பு கொண்டவர்களும் இனங்காண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரப் பகுதியில் அவர் சென்று வந்த 4 கடைகளுக்கு மேல் மூடப்பட்டுள்ளன. அதேபோல் அவர் சென்ற உணவகம், சிகை அலங்கார நிலையம் போன்றனவும் மூடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நடமாட்டங்களைக் குறைக்க வேண்டும். தாம் செல்லும் இடங்கள் தொடர்பான விவரங்களை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் அவர்களுடைய வீடுகளிலேயே இரண்டு வாரங்களுக்குத் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு பிற்பாடு வெளியில் செல்லலாம்.

வெளியே போவது மிக ஆபத்தான விடயம். தற்போது வடக்கில் தொற்று அதிகரிப்பதற்கு வெளிமாவட்டத்திலிருந்து வருவோரின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணமாக இருக்கலாம். அதே போல் வெளிமாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்துக்கு வருவோர் கட்டாயமாக அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

சமூக இடைவெளி, முகக்கவசம் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் செயற்பட வேண்டும். தற்போது கடைகள், வர்த்தக நிலையங்களைப் பொறுத்தவரைக்கும் அவர்களுக்குச் சில அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்கின்றோம்.

கூடுமான வரைக்கும் அங்காடி வியாபாரங்களைத் தவிர்ப்பது நல்லது. குறிப்பாக வெளி மாவட்டங்களிலிருந்து வந்து அங்காடி வியாபாரம் செய்பவர்கள் தற்காலிகமாகத் தமது வியாபாரத்தை நிறுத்த வேண்டும். - என்றார்.

## கொழும்பு கடலோர பொலிஸ் நிலையம் மூடல்; 10 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா உறுதி

### பொறுப்பதிகாரி உட்பட 80 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஒக்.31

கொழும்பு கடலோரப் பொலிஸ் நிலையம் கொரோனா அச்சம் காரணமாக இன்று காலை முதல் மூடப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 10 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதனால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 80 பேர் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடலோரப் பொலிஸ் நிலையச் செயற்பாடுகள் தற்காலிகமாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

# 20ஆக உயர்ந்தது கொரோனா சாவு!

### 8 நாள்களில் மட்டும் 7 பேர் பலியெடுப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் சாவடைந்துள்ளார்.

கொழும்பு - 12, புதுக்கடையைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றால் பலியானவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று மரணமான குறித்த பெண்ணுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த பெண், நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் சிக்கி கடந்த 8 நாள்களில் (ஒக்டோபர் 22 - ஒக்டோபர் 30 வரை) 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஊடக அமைச்சில் நால்வருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.31

ஊடக அமைச்சின் அதிகாரிகள் நால்வருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவரும் இதில் அடங்கியுள்ளார்.

இதேவேளை, பொரளை பொலிஸ் நிலையத்தின் 6 உத்தியோகத்தர்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினர்.

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியோரை 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்த நடவடிக்கை

### அவர்களைத் தேடிப் பொலிஸார் வலைவீச்சு

கொழும்பு, ஒக் 31

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்துவதற்கு முன்னர் மேல் மாகாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு புறப்பட்டவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இத்தத் கவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறிப்பாக நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் மேல் மாகாணத்தின் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று மற்றும் நேற்று முன்தினம் ஆகிய இரு தினங்களில், மேல் மாகாணம் மற்றும் குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவிலிருந்து வேறு பிரதேசங்களுக்குச் சென்றவர்களை, அவர்கள் தங்கியிருக்கும் இடங்களிலேயே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இது தொடர்பில் தற்போது நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிவிப்பு வெளியாகியதை அடுத்து திரள் திரளாக மேல் மாகாணத்திலிருந்து குறிப்பாக கொழும்பு மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பலரும் சென்றுள்ளனர். இந்த நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து தொழிலுக்காக வந்து கொழும்பில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு சென்றிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையிலும் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து இவ்வாறு மேல் மாகாணத்திலிருந்து சென்றவர்கள் பற்றிய தகவல்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேலும் அவர்கள் மீண்டும் திரும்புகின்ற சந்தர்ப்பத்தில் தனிமைப்படுத்தல் சட்டம் அவர்கள் மீது பாயும் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## தூக்கில் தொங்கிய நிலையில் விகாராதிபதியின் சடலம் மீட்பு!

திருமலை, ஒக்.31

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லங்காதுறையில் உள்ள விகாரையின் விகாராதிபதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

லங்காதுறையில் உள்ள பக்வத விகாரையின் விகாராதிபதியே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இன்று காலை கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட விகாராதிபதியை சடலமாக மீட்டுள்ளனர். குறித்த விகாராதிபதியின் மரணம் தொடர்பான விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



வாழ்க்கை

தொகுப்பு - ப்ரியமதா பயஸ்

# ஓய்வையும் பொழுதுபோக்கையும் கொன்று போட்ட கொரோனா

ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு இரண்டும் ஒருவரின் இலவச நேரத்தை விவரிக்க பயன்படும் சொற்கள் அல்லது ஒருவர் தனது இலவச நேரத்தை எவ்வாறு செலவிடுகிறார் என்பதை விவரிக்க பயன்படுகிறது.

அவற்றின் பொருளில் அவை ஒத்ததாகத் தோன்றினாலும், அவற்றின் பயன்பாட்டின் சூழல்களை விவரிக்கும் போது அவற்றுக்கிடையே ஒரு நேர்த்தியான கோடு வரையப்படலாம்.

ஓய்வு மற்றும் பொழுதுபோக்குகளுக்கு இடையில் அறியக் கூடிய முக்கிய வேறுபாடு என்னவென்றால், பொழுதுபோக்கு என்பது முதன்மையாக ஒருவரை மகிழ்விக்கும் நிகழ்வாக வரையறுக்கப்படுகிறது, அதேசமயம் பொழுதுபோக்கு என்பது பொழுதுபோக்குக்கு ஒருவர் பயன்படுத்தும் இலவச நேரமாகும்.

ஆங்கில இலக்கணத்தில் பேச்சின் பகுதிகளின் கீழ், பொழுதுபோக்குகளை பெயர்ச்சொற்களின் கீழ் மட்டுமே வகைப்படுத்த முடியும், அதே நேரத்தில் ஓய்வு என்பது பெயர்ச்சொற்கள் மற்றும் பெயரடைகள் ஆகிய இரு குழுக்களுக்கும் சொந்தமானது.

பொழுதுபோக்கு என்பது வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவம். சில சுவாரஸ்யமான செயல்பாடுகளால் பொழுதுபோக்கு அல்லது மகிழ்ச்சியை உணர்த்தும் நேரம் அல்லது வடிவம் என பொழுதுபோக்கு வரையறுக்கப்படுகிறது.

மெரியம் வெப்ஸ்டர் அகராதி விவரித்தபடி, பொழுதுபோக்கு என்பது 'பொழுதுபோக்குக்கான செயல்' அல்லது 'கேளிக்கை அல்லது திசைதிருப்பல் குறிப்பாக கலைஞர்களால் வழங்கப்படுகிறது, பொழுதுபோக்குகளை வழங்குவதற்காக ஒரு வாடகைக் குழு.'

இதேபோல், ஒக்ஸ்போர்டு அகராதி பொழுதுபோக்கை 'கேளிக்கை அல்லது இன்பத்தால் வழங்கும் அல்லது வழங்குவதற்கான செயல்' என்று வரையறுக்கிறது.

ஆகவே, பொழுதுபோக்கு என்பது பெரும்பாலும் ஒருவருக்கு மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்ட அல்லது சில சமயங்களில் ஒரே நபரால் வழங்கப்பட்ட சில மகிழ்ச்சியான அல்லது வேடிக்கையான விடயமாகும், மேலும் இது பொழுதுபோக்குக்குரிய நபரை மன அழுத்தத்திலிருந்து விடுபடவோ அல்லது வாழ்க்கையில் மன அழுத்த விடயங்களிலிருந்து திசைதிருப்பவோ உதவுகிறது.

விருந்து, இசை, நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், வாசிப்பு, நாடகம், நடனம் போன்ற பல்வேறு வகையான பொழுதுபோக்குகள் மனிதகுல வரலாறு முழுவதும் உள்ளன. இப்போது கொரோனா உலகம் முழுவதும் தாண்டவமாடுவதால் கண்டிப்பாக அனைத்து மனிதர்களும் உடலளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்களை சந்தித்துள்ளனர். இதன் தாக்கம் எப்போதோ ஒருநாள் முடிவுக்கு வந்தாலும் அதன் அடுத்த கட்ட மனித வாழ்வியல் உளவியல் இன்னும் பலமடங்கு சிக்கல்களை உருவாக்க நேரும் என பயத்தை விளைவிக்கிறது . ஆக நாம் பெரிய இக்கட்டான சூழலை இப்பொதுமட்டுமல்ல இதற்க்கு பின்னரும் எதிர்கொள்ளப்போகிறோம் .

ஒட்டுமொத்தத்தில் நான் கொரோனாவுக்கு பின்னர் ஒரு புதிய உளவியல் வரைமுறையை உருவாக்க வேண்டி இருக்கும் என நான் எதிர்பார்க்கிறேன் .

காலம் பிந்திய பல பரிதவிப்புக்களை கொரோனாவின் பின் நாம் வெளியிட வேண்டி இருப்போம். கொத்துக்கொத்தாக மடிந்த நம் உறவுகளின் பிரிவுகளை மீதமாக இருக்கும் நமக்கு வேண் டியவர்களிடம் கூறி அவர்களோடு நெருக்கமாகிக் கட்டி தழுவி நம் பாரங்களை குறைக்க கொரோனாவுக்கு அடுத்த காலத்துக்காக நாம் காத்துக்கிடக்கிறோம் .

# வளர் இளம் பருவம் அவதானங்கள்

வளர் இளம் பருவம் என்பது 10 முதல் 19 வயதுக்குட்பட்ட பருவம் ஆகும். இந்த பருவத்தினர் குழந்தையும் அல்லர், வளர்ந்த பெண்களும் அல்லர். இரண்டிற்கும் இடைப்பட்ட பருவம். இப்பருவத்தில் நல்ல ஒழுக்கத்தையும், நல்ல சிந்தனையையும், நல்ல உடல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கல்வி கிடைப்பது மிகவும் முக்கியம். அதில் பள்ளிகளும், பெற்றோர்களும் சமுதாயமும் பெரும் பங்கு வகிக்கிறனர். வளர் இளம் பெண்களை அதிகம் பாதிக்கும் உடல் ஆரோக்கிய பிரச்சினைகள்:-

**சிறு நீரகத் தொற்று:-** பெண்ணாக பிறந்த எல்லோரும் வாழ்நாளில் ஏதோ ஒரு தருணத்தில் நிச்சயம் இந்த அவதியை அனுபவித்திருப்பார்கள். சிறுமிகள் முதல் வயதான பெண்கள் வரை எல்லோரையும் தாக்கக் கூடிய அந்த நோய் யூரினரி இன்பெக்ஷன் எனப்படுகிற சிறு நீரகப் பாதைத் தொற்று. ஆரம்பத்திலேயே கவனிக்காவிட்டாலும், அடிக்கடி தொடர்ந்தாலும் இந்த பிரச்சினை எப்படியெல்லாம் பாதிப்பைக் கொடுக்கிறது தெரியுமா?

ஆண்களின் சிறுநீர் பைக்கும், அது வெளியேறுகிற துவாரத்துக்குமான இடைவெளி 15 செ.மீ, என்றால், பெண்களுக்கு அது வெறும் 3 செ.மீ.மட்டுமே. அதனால் மிகச் சுலபமாக கிருமிகள் பெண்களின் சிறுநீர் பையைத் தாக்குகின்றன. பெண்களுடைய உடல்வாகு மட்டுமின்றி ஒவ்வொரு வயதிலும் அவர்கள் சந்திக்கின்ற சில விடயங்களும் இந்தத் தொற்றுக்கு மிக முக்கியமான காரணமாகின்றன.

பள்ளிக்கூடம் செல்லுகிற வயதுப் பெண் குழந்தைகள், பள்ளியில் உள்ள கழிவறையின் சுகாதாரம் சரியில்லாத காரணத்தினால் சிறுநீர் கழிப்பதைத் தவிர்ப்பார்கள். தண்ணீர் குடிக்கமாட்டார்கள். இதனால் அவர்களுக்கு இந்தத் தொற்று அடிக்கடி வரும். அதன் விளைவாக வயிற்றுவலி, சோர்வு, பசியின்மை. படிப்பில் கவனம் சிதறல் போன்றவை வரலாம். அடுத்து மாதவிலக்கு நாள்களில் சுத்தமாக இல்லாத பெண்களுக்கும், தரமான நாப்கின்களை உபயோகிக்காத பெண்களுக்கும் இந்த தொற்று அடிக்கடி வரும்.

அடிக்கடி சிறுநீர் கழிப்பது, சிறுநீர் கழிக்கிறபோது எரிச்சல், முழுமையாக கழிக்காத உணர்வு, சில நேரங்களில் காய்ச்சல் போன்றவை யூரினரி இன்பெக்ஷனுக்கான அறிகுறிகள். எப்போதோ ஒரு முறை வந்தால் மருத்துவரிடம் ஆலோசித்து, மருந்துகள் எடுத்துக்கொள்ளலாம். சிலருக்கு இது அடிக்கடி வரும். அவர்கள் சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டும். சாதாரண சோதனை மட்டும் போதாது என்கிற நிலையில் சலம் சோதனையும் செய்து காரணத்தைத் துல்லியமாக கண்டுபிடித்து சிகிச்சை பெற வேண்டும்.

தற்பொழுது உடல் உழைப்பு, விளையாட்டு ஏதுமின்றி வளர் இளம் பெண்கள் டிவி, கம்பியூட்டர், செல்போன், செல்பி என்றுதான் இருக்கிறார்கள். பூப்பெய்திய பருவத்தில் கிடைக்கும் உளுந்தங்களி, வெந்தயக்களி போன்ற உணவுகள் எல்லாம் தற்கால இளம்பெண்கள் சாப்பிடுவதில்லை. இவையெல்லாம் சினை உறுப்பு வளர்ச்சி, கருப்பை மற்றும் இடுப்பெலும்பு விரிவடைய உதவும்.

இவ்வாறின்றி தற்போதைய நவநாகரீக வாழ்க்கை முறையால் உடல் அதிக எடை அடைதல், சினை உறுப்பு வளர்ச்சியின்றி அவற்றில் நீர் கோர்த்து கருமுட்டை வளராது, வெடிக்காது, இதனால் ஒழுக்கமற்ற மாதவிடாய் மற்றும் குழந்தையின்மை உண்டாகிறது.



# குழந்தைகளின் நடவடிக்கைகளை மாற்றும் தந்திரங்கள்!!

உங்கள் குழந்தையை ஒரு நடவடிக்கையிலிருந்து இன்னொரு நடவடிக்கைக்கு மாற்றுவதென்பது, உங்களுக்கு கடினமான ஒன்றாக இருக்காது. எப்போதென்றால், அவர்களின் தேவைகளை நீங்கள் உணர்வு பூர்வமாக அறியும் போது.

உங்கள் குழந்தை விளையாட்டுப்பொருள்களை வைத்துக்கொண்டு, நீங்கள் ரசிக்கும்படியான ஒரு விளையாட்டை மேற்கொண்டுள்ளது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அது இரவுநேரம். உங்கள் குழந்தை தூங்குவதற்கான நேரமாக இருக்கிறது.

சரியான நேரத்தில் குழந்தை தூங்கி எழுந்தால் தான் அதன் ஆரோக்கியமும், மறுநாளைக்கான அதன் செயல்பாடும் சிறப்பாக அமையும் என்ற கவலை உங்களுக்கு. ஆனால் குழந்தையோ விளையாட்டில் தீவிரமாய் இருக்கிறது.

எனவே, விளையாட்டிலிருந்து உங்களின் குழந்தையை விடுவித்து, அதை படுக்கைக்கு அழைத்து வரும் செயல்பாட்டை நீங்கள் எப்படி சாமர்த்தியமாய் கையாள்வீர்கள்?

இதோ உங்களுக்கான வாய்ப்புகள்:-

குழந்தை அழ அழ, அதை வலுக்கட்டாயமாகதூக்கிக்கொண்டு படுக்கைக்கு செல்வீர்கள்.

குழந்தையின்எதிர்ப்பைபொருள் படுத்தாமல், அனைத்து விளையாட்டுப் பொருள்களையும் எடுத்து, அதற்கான பையில் போடுவீர்கள்.

படுக்கையின்போது உங்களின் குழந்தை விரும்பிக் கேட்கும் பாடலைப் பாடி, அந்த இசைக்கு உங்கள் குழந்தையின் ரியாக்ஷன் எப்படி இருக்கிறது என்பதை கவனித்து, சாதகமாகஇருந்தால், குழந்தையை மெதுவாக தூக்கிக் கொண்டு, படுக்கைக்கு செல்வீர்கள்.

மூன்றாவது வகையை நீங்கள் தேர்வு செய்தால், நீங்கள் குழந்தையை கையாள்வதில் தேர்ச்சி பெற்றுள்ளீர்கள் என்று அர்த்தம்.

குழந்தைகளின் நடவடிக்கைகளை சூழலுக்கு ஏற்ப மாற்றுவது குறித்த ஆலோசனைகளை பெற்றோர்கள் தந்திரமாக கையாளவேண்டும்

நடவடிக்கை மாற்றம் தொடர்பாக குழந்தையைக் கையாளும்போது, எப்போதுமே சாதுர்யமாக நடந்து கொள்வது முக்கியம்.

குழந்தைக்கும் உணர்வுகள் உண்டு, அதற்கும் விருப்பங்கள் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

உதாரணமாக, ஒரு பெரிய நபர், ஆர்வமாக ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாலோ அல்லது படம் பார்த்துக் கொண்டிருந்தாலோ, அவர் அதிலிருந்து வேறு ஒரு செயல்பாட்டில் உடனே ஈடுபட விரும்ப மாட்டார்.

ஆனால், குழந்தை மட்டும்தன்செயலை உடனே மாற்றிக் கொள்ளும் என்று நாம் நினைப்பது தவறு.

பெற்றோர், தம் குழந்தையிடம் இராணுவ கட்டுப்பாட்டையும், கண்டிப்பையும் காட்டக் கூடாது. மாறாக, நெகிழ்வுத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். குழந்தைக்கு அவகாசம் தருவது முக்கியம்.

# இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க ம.வியிலிருந்து ஏழு மாணவர்கள் ஒரேநேரத்தில் பல்கலைக்குத் தெரிவு









முல்லைத்தீவு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் 2019 கலவிப் பொதுதராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் வணிகப்பிரிவிலிருந்து 05 மாணவாகளும், கலைப்பிரிவில் இருந்து 02 மாணவாகளுமாக 7 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் வணிகப் பிரிவில் இருந்து 9 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி அதில் 5 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வணிகப்பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான மாணவர் விவரம்:-

(1) சிறிகாந்தன் மெனியா (2ஏ,பி) - பேராதனைப் பல்கலைக்கழகம்.

(2) சிவஞான மூர்த்தி சருயா (ஏ,பி,சி) - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

(3) அன்ரோவிஜிகரன் டிலக்கனா (ஏ,2பி) - சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம். (4) அருட்செல்வன் நிதர்சன் (ஏ,பி,சி) - பொறட்டுவ பல்கலைக்கழகம்

(5) கண்ணன் கிசோகுமார் (ஏ,2பி) - மொறட்டுவ பல்கலைக்கழகம்.

கலைப்பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான மாணவர் விவரம்:-

(1) தேவசகாயம்பிள்ளை டிலக்கனா (ஏ,2பி) - சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

(2) நமணன் விழியரசி(ஏ,பி,சி) - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

இவர்களை வழிநடத்திய பெற்றோர், இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்கள் சிறப்புறக் கற்று வாழ்வில் முன்னேற காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

# திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்



திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு கலாநிதி பிறயன் உடைக்வே ஆண்டகை இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை 26 ஒக்ரேபர் 2020 அன்று சந்தித்து உரையாடினார்.

அந்தச் சந்திப்பின் போது திருத்தந்தையின் பிரதிநிதி இலங்கை அரசிற்கும் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையில் நிலவும் ஒத்துழைப்புப் பற்றிப் பாரட்டினார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2012ஆம் ஆண்டும், 2014 ஆம் ஆண்டும் தான் வத்திக்கான் நகருக்கு விஜயம் மேற்கொண்டு திருத்தந்தையை சந்தித்த அனுபவத்தை நினைவு கூர்ந்தார்.

இந்த இரண்டாவது சந்திப்பின் போதுதான் திருத்தந்தையை இலங்கை நாட்டிற்கு வரும்படி விடுத்த அழைப்பை ஏற்று திருத்தந்தை 2015ஆம் ஆண்டு இலங்கை வந்தார் என்றும் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த திருத்தந்தையின் பிரதிநிதி திருத்தந்தை தனது இலங்கை வருகையின் போது தமக்கு இலங்கையில் தரப்பட்ட மகத்தான வரவேற்பை நினைவு கூர்ந்தார் என்றும், திரும்பவும் விரைவில் இங்கு வரலாம் என நம்புகிறார் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய திருத்தந்தையின் பிரதிநிதி வத்திக்கானுக்கும் இலங்கைக்குமான நல் உறவை தொடந்து பேணுவதாகவும் கல்வி, சுகாதாரம், ஏழைகளுக்கான உதவி போன்ற துறைகளில் உதவுவதாகவும் தெரிவித்தார். கத்தோலிக்க திருச்சபை இலங்கையில் ஆற்றும் பாரிய பணிகளை - குறிப்பாக கல்வித்துறையில் ஆற்றும் பணிகளை - பிரதமர் உறுதிப்படுத்தினார்.

ஈஸ்டர் தினத் தாக்குதல்கள் பற்றியும் இருவரும் பேசிக்கொண்டனர். அரசிற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையை உரிய கவனத்துடன் எடுத்துத் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் துரதிஷ்ட விதமான அநியாய உயிர் இழப்புக்களைத் தவித்திருக்கலாம் என்றார் பிரதமர்.

அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவே ஈஸ்டர் தினத் தாக்குதல்களின் பின்னர் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் விஜயம் செய்த முதல் அரசியல்வாதியாவார்.

இலங்கை நாடு தற்போது அமைதியான நாடு என அறியப்படுகிறது. பல நாடுகளுக்கும் முன்மாதியான நாடாகவுள்ளது. இங்கிருந்து பணியாற்றுவது எனக்கு மகிழ்ச்சியாகவுள்ளது என்றார் திருத்தந்தையின் பிரதிநிதி.

பேராயர் மேதகு கலாநிதி பிறயன் உடைக்வே ஆண்டகை. திருத்தந்தையின் இலங்கைக்கான புதிய பிரதிநிதியாக அண்மையில் இவர் நியமனப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தந்தையின் இலங்கைக்கான வத்திக்கான் தூதரகம் 1976ஆம் ஆண்டு முதல் கொழும்பில் இயங்கி வருகிறது. வத்திக்கான் உலகின் மிகச்சிறிய நாடாக இருந்தாலும் இறையாண்மை உடைய நாடாகும். உலகின் 108 நாடுகளில் வதிவிட தூதரகங்களை வைத்திருக்கிறது. மேலும் 74 நாடுகளுடன் வதிவிட தூதரகங்களை அமைக்கும் தகுதியில் உள்ளது.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் அமெ. இராஜாங்கச் செயலாளர் பொம்பியோ



இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக்கல் பொம்பியோ 28 ஒக்ரேபர் 2020 அன்று கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் விஜயம் செய்து ஆலயத்தில் தற்கொலை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளை பார்வையிட்டமையுடன் இறந்த இறைமக்களின் நினைவு சின்னத்திற்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# சகோதரர்கள் தியாக்கோன்களாக அருட்பொழிவு பெற்ற போது



யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடத்தை சேர்ந்த தயாதீபன் - யூட் கமில்டன் - நிலான் யூலியஸ் ஆகிய சகோதரர்கள் தியாக்கோன்களாக அருட்பொழிவு பெற்ற சில நெடிப்பொழுதுகளில் பதியப்பட்ட படம் இதுவாகும்.

# ஒன்றிணைந்த செப தினமாக இன்று நவம்பர் முதலாம் திகதி

## இலங்கை கத்தோலிக்க தேசிய பொது நிலையினர் ஆணைக்குழு அழைப்பு

கொரோனா தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்ற முழு உள்ளத்தோடு செபத்தில் ஒன்றிணைவோம் வாருங்கள் என இலங்கை கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழு நவம்பர் முதலாம் திகதியை இலங்கை முழுவதிலும் ஒன்றிணைந்த செப தினமாக்க அழைப்பு விடுத்து அது இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் - திருகோணமலை - மன்னார் - மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் அடங்கிய வட கிழக்கு ஆயர்மன்றமானது உலகில் கொரோனாத் தொற்று நோய் அகன்று போக மரியன்னையின் செப மாலை மாதமாகிய ஒக்ரோபர் 24ஆம் திகதியை செபநாளாக்கி அது வட கிழக்கு முழுவதிலும் அனுஷ்டிக்கப்பட்டமை வாசகர் அறிந்ததே.

# விஜயதசமியில் ஏடு தொடக்கும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



விஜயதசமியில் குழந்தைக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை சம்பிரதாய பூர்வமாக ஏடு தொடக்கிய போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும். அவர் மூலம் முதன் முதலாக தமிழ் மொழியின் அகரத்தை எழுதி மகிழ்கிறார்கள் குழந்தைகள்.

# யாழ் ஆயரின் முல்லை மறைக்கோட்ட கூளாமுறிப்பு பங்கு தரிசிப்பின் பதிவு



யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை முல்லைத்தீவு மறைக் கோட்டத்தின் கூளாமுறிப்பு பங்கின் மாமுலை - கூளாமுறிப்பு - ஒட்டிசுட்டான் - முத்தையன் கட்டு - மன்னகண்டல் ஆகிய ஆலயப் பங்குகளுக்கு அண்மையில் விஜயம் செய்து நிலமைகளை நேரடியாகப் பார்வையிட்டு பங்கு மக்களுடனும் பங்குத்தந்தை நிக்சன் கொலின்ஸ் அடிகளாருடனும் கலந்துரையாடியபோது பதிவுசெய்யப்பட்ட படங்கள் இவை.

# சொர்க்கம் திருமண சேவை

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி - 1982.09.05 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் -மூலம்
தகைமை - High School Canada தொழில் - Own Business
எதிர்பார்ப்பு - விவாகரத்தான மணமகள்.

பிறந்த திகதி - 1979.10.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - பூரட்டாதி
செவ் - 02 இல் தகைமை - AL
தொழில் - Gas Station London
எதிர்பார்ப்பு -அழகிய நற்குடும்ப பிண்ணியுள்ள மணமகள்.

பிறந்த திகதி - 1979.11.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - பரணி
தகைமை - High School America தொழில் - Manager
எதிர்பார்ப்பு - நற்குடும்ப பின்னணியுள்ள மணமகள்.

பிறந்த திகதி - 1990.02.23 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - திருவோணம்
தகைமை - B.Eng Machanical Engineer
தொழில் - Engineer London
எதிர்பார்ப்பு - அழகிய படித்த மணமகள்.

பிறந்த திகதி - 1986.08.25 மதம் - இந்து
ஜாதி - கோவியர் நட்சத்திரம் - அஸ்வினி
செவ் - 4இல்
தகைமை - Computer Programer
தொழில் - கனடா
எதிர்பார்ப்பு - நற்குடும்ப பின்னணியுள்ள மணமகள்.

பிறந்த திகதி - 1986.04.18 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 2 இல்
நட்சத்திரம் - ஆயிலியம் 2 ஆம் பாதம்
தகைமை - A/L
தொழில் - அரச முகாமைத்துவ உத்தியோகம்
எதிர்பார்ப்பு - அரச தொழில் புரியும் மணமகள்.

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி - 1990.11.07 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் நட்சத்திரம் - புனர்பூசம்
கி.பா - .. செவ் - லக்
தகைமை - BFA தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச தொழில் புரியும் மணமகன்.

பிறந்த திகதி - 1995.02.06 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - .. செவ் - 7 இல்
தகைமை - College of Education தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - அரச தொழில் புரியும் / வெளிநாடு மணமகன்

பிறந்த திகதி - 1983.10.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அனுஷம்
கி.பா - .... செவ் - லக்
தகைமை - Bcom, HNDA
தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - அரச/ தனியார் தொழில் புரியும் மணமகன்

பிறந்த திகதி - 1995.09.23 மதம் - இந்து
ஜாதி - கோவியர் நட்சத்திரம் - பூரம்
கி.பா - .. செவ் - 12 இல்
தகைமை - IT Diploma தொழில் - ...
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் புரியும் (கிறிஸ்தவ) மணமகன்.

பிறந்த திகதி - 1987.08.02 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - .. செவ்/ சூரி - 07 இல்
தகைமை - HNDA, IELTS தொழில் - Bank Goverment
எதிர்பார்ப்பு - வெளிநாடு/ அரச தொழில் புரியும் மணமகன்.

பிறந்த திகதி - 1992.09.05 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - மூலம்
தகைமை - BA, IT, MA Econamics தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு -அரச தொழில் புரியும் மணமகன்.

**102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.** www.sorkham.com

**தொடர்புக்கு - 0014166661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515**



# மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

**இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 077 197 1667**
**077 3164 796**

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1985.07.20 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 21 செவ் - சூரி 12
தகைமை - A/L தொழில் - அரச சேவை யாழ்
எதிர்பார்ப்பு - அரச சேவை யாழ் மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1985.05.15 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -உத்தரட்டாதி
கி.பா - 18 சூரி/ செவ் - ...
தகைமை - B.com தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK or Ceylon மணமகள் சூரி/ செவ் குறிப்பு விருப்பம்.

பிறந்த திகதி -1982.12.25 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - 32 செவ்/ சூரி - 05 இல்
தகைமை - Banking Diploma
தொழில் - Assistant manager Bank
எதிர்பார்ப்பு - A/L அரச சேவை மணமகள் தேவை. (ரேவதி, கார்த்திகை, ரோகினி, புனர்பூசம், உத்திராடம்)

பிறந்த திகதி - 1989.09.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -புனர்பூசம் (3)
கி.பா - 31 செவ்/ சூரி - 3 இல்
தகைமை - B.A தொழில் - ஆசிரியர்.
எதிர்பார்ப்பு - அரச சேவை யாழ் மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1987.01.19 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 41 செவ் - 4 இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - France PR
எதிர்பார்ப்பு -France மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1988.08.21 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம் (3)
கி.பா - 40 செவ் - 7 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு -Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1990.08.20 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம் (4)
கி.பா - 25 செவ் - 8 இல்
தகைமை - Accountant தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK மணமகள் காரைநகர் விருப்பம்.

பிறந்த திகதி - 1990.05.17 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருகோணம் (4)
கி.பா - 27 செவ் - 12 இல்
தகைமை -Cima Final
தொழில் - Chatted Accountant Newzealand
எதிர்பார்ப்பு - Newzealand UK மணமகள் பட்டதாரி

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1993.03.05 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - பூசம் (2)
கி.பா - 30 செவ் - 3 இல்
தகைமை - B.S.C, M.S.C தொழில் - Manager Company
எதிர்பார்ப்பு - UK, Canada, Australia PR மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1995.12.06 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 43 செவ் - 10 இல்
தகைமை - ரோகினி 5' 2"
தொழில் - Bisness Management
எதிர்பார்ப்பு - வெளிநாடு அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1992.01.31 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 93 செவ் - 7 இல்
தகைமை - B.T.Software Engineer
தொழில் - ICT உதவியாளர் அரச சேவை.
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1994.11.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 44 செவ் - 12 இல் 5'2"
தகைமை - B.A.HONS தொழில் - D.o அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.08.30 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 30 செவ் - 01 இல்
தகைமை - B.S.C, M.S.C
தொழில் - ஆராய்ச்சியாளர் அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை உயர் பதவி மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1992.11.11 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 12 5'2" செவ் - 02 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் -ஆசிரியர்
எதிர்பார்ப்பு -அரச சேவை உயர் பதவி மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1987.04.19 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 8 செவ் - 12 இல்
தகைமை - Dental தொழில் - Dental Doctor (Norway)
எதிர்பார்ப்பு -Norway பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1992.02.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மிருகசீரிடம் (2)
கி.பா - 28 5'1" செவ் - 2 இல்
தகைமை - I.T Software Engineer
தொழில் - Company Colombo.
எதிர்பார்ப்பு -கொழும்பில் வேலை செய்யும் மணமகன்.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**


# கொரோனாவின் 3 ஆவது அலை வீரியமானது!

இலக்கையில் தற்போது பரவும் கொரோனா வைரஸ் முன்னர் பரவியதை விட வித்தியாசமானது எனவும், அதிவேகமாகப் பரவும் தன்மை கொண்டுள்ளது எனவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தின் ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாகவே இலங்கை முழுவதும் தொற்றுப் பரவலின் வேகம் அதிகரித்துள்ளது என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, பேலியகொட மீன் சந்தை மற்றும் பேருவளை துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வந்த சீனக்குழுவில் புதிய தூதுவர் மட்டும் தனிமையில்

## ஏனையோருக்கு நடமாட அனுமதி



கொழும்பு, நவ.01

வெளிநாட்டு இராஜதந்திரிகளின் விஜயங்களின் போது தனிமைப்படுத்தல் சட்டம் அவர்கள் மீது பாய்வதில்லை என்கின்ற விமர்சனங்கள் உள்ள நிலையில் இலங் கைக்கு விஜயம் செய்துள்ள சீனத் தூதுவர் ட்சீ சென்ஹாங் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் உள்ள பிரதான பி.சி.ஆர். இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள கோளாறைத் திருத்துவதற்காக விசேட சீனத்தூதுக் குழுவும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. அவர்களில் எவரும் தனிமைப்படுத்தப்படவில்லை.

இலங்கைக்கான சீன மக்கள் குடியர சின் புதிய தூதுவர் ட்சீ சென்ஹொங் (Qi Zhenhong) நேற்று முன்தினம் இரவு கொழும்பை வந்தடைந்துள்ளார்.

ட்சீ சென்ஹொங் பி.சி.ஆர். பரிசோதனையினை நிறைவு செய்து சீன ஈஸ் டன் ஏயார்லைன்ஸுக்குச் சொந்தமான எம்.யு. 231 விமானம் மூலம் கட்டுநாயக்க விமானநிலையத்தை அவர் வந்தடைந்தார் என்று கொழும்பிலுள்ள சீன தூதர கம் குறிப்பிட்டுள்ளது.

புதிய தூதுவர், அடுத்து வரும் இரு வாரங்களுக்கு சுயதனிமைப்படுத்தலில் தன்னை ஈடுபடுத்தவுள்ளார் எனவும், விமான நிலையத்தில் வைத்து வைபவ ரீதியான வரவேற்பை இலங்கையின் தற்போதைய நிலைமை கருதி அவர் மறுத்து விட்டார் எனவும், சொற்ப அளவிலான சீனத் தூதரக இராஜதந்திர சேவையில் உள்ளவர்களே அவரை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்றனர் எனவும் சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

1965ஆம் ஆண்டு பிறந்த இவர், 1988ஆம் ஆண்டு முதல் சீன இராஜதந்திர சேவையில் செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் சீன சர்வதேச கற்கைகள் நிறுவனத்தின் தலைவரான இவர், பொருளாதார நிபுணர் என்பதோடு பீஜிங்கில் உள்ள இராஜதந்திர சேவைகளுக்கான பணியகத்தில் செயற்பாட்டு பிரதி பணிப்பாளராக செயற்பட்டுள்ளமையோடு சீன பிரிட்டிஷ் கூட்டுக்குழுமத்தின் இரண்டாம் நிலை செயலாளராகவும் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் பழுதடைந்துள்ள பிரதான பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரத்தை சரிசெய்ய சீன நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்கு வந்தனர். கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதுவரை செயலிழப்புக்கான காரணம் தெளிவாக இல்லை என்றும், 7 நாள்களும் 24 மணித்தியாலமும் பல மாதங்களாக இயங்கிய பிற இயந்திரங்களும் சரி பார்க்கப்பட்டு பராமரிக்கப்படும் என்றும் சீனத் தூதரகம் ருவிட்டரில் பதிவிட்டுள்ளது.

பி.சி.ஆர். இயந்திரத்தின் செயலிழப்பு காரணமாக, கிட்டத்தட்ட 20 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமாகிவிட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் கூட்டத்தைப் புறக்கணித்த உறுப்பினர்கள்

## மாநகரசபையில் இரு அணிகளாகப் பிளவு

யாழ்ப்பாணம்,நவ.01

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையினால் அதன் மாநகர சபை உறுப்பினர்களுக்கு என விடுக்கப்பட்ட கூட்ட அழைப்பை பெரும்பான்மை உறுப்பினர்கள்புறக்கணித்துள்ளனர்எனத்தெரியவருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சிக்குள் தற்போது நிலவும் உள் முரண்பாடு காரணமாக யாழ். மாநகர சபையில் கட்சி இரண்டுபடும் நிலையில் மணிவண்ணன் தரப்பு தனித்தே செயல்படுகின்றது. இந்த வகையில் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் முன்னணியின் 13 உறுப்பினர்களும் இரண்டு பட்டே செயல்படுகின்றனர் எனத் தெரிகின்றது.

கடந்த 29 ஆம் திகதி சபையில் இடம் பெற்ற விசேட அமர்வில் அமைக்கப்பட்ட ஓர் குழுவில் முன்னணியின் சார்பில் மணிவண்ணனின் பெயர் மற்றுமோர் முன்னணி உறுப்பினரால் பிரேரிக்கப்பட்டது. இதன்போது அதனை மறுத்து ஜெயசீலனின் பெயரை முன்னணி சார்பில் இரண்டாம் பெயராகவும் பிரேரிக்கப்பட்ட போது ஒரு கட்சிக்கு ஓர் உறுப்பினர் என்ற அடிப்படையில் இரண்டாவது பெயர் நிராகரிக்கப்பட்டது.

இந்த விடயம் கட்சியின் தலைமைக்குக் கொண்டு செல்லப்பட்டதனால் மறு நாள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர்களிற்கான விசேட கூட்டம் ஒன்று கட்சித் தலைமையினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால் முன்னணியின் சார்பில் மாநகரசபையில் அங்கம் வகிக்கும் 13 உறுப்பினர்களில் 9 பேருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனை அறிந்த மேலும் சில உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கும் 13 உறுப்பினர்களிற்கும் அழைப்பு விடுத்தால் மட்டுமே கூட்டத்துக்குச் சமுகம் அளிப்போம் எனத் தெரிவித்து மறுநாள் கூட்டத்தைப் புறகணித்தனர்.

ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கஜேந்திரகுமார் விசுவாச அணி எனக் கருதப்படும் நால்வர் மட்டுமே பங்குகொண்டனர். எஞ்சிய 9 பேரில் 8 பேர் மணிவண்ணன் விசுவாச அணியாக கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிகிறது. மற்றொருவர் கஜேந்திரகுமார் விசுவாச அணியில் இருந்தபோதும் பிறிதொரு காரணத்திற்காக கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை எனவும் கூறப்பட்டது.







### தேவை

மில் ஒன்றினை நிறுவுவதற்கு தேவையான பாவித்த நல்ல நிலையில் உள்ள அரிசி, மிளகாய் ஆகியன திரிப்பதற்கான இயந்திரங்கள் தேவை.
விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்
0777323156
0763899554
















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்